# වාර්ෂික වාර්තාව

# வருடாந்த அறிக்கை

# Annual Report

# 2016

## ජනතා වතු සංවර්ධන මණ්ඩලය

## மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை

## JANATHA ESTATES DEVELOPMENT BOARD

# மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை

## வருடாந்த அறிக்கை - 2016

### நிறுவன நோக்கும் பணியும்

### நோக்கு

இலாபரகமான, பொருளாதார ரீதியில் வலுவுடைய அரச கூட்டமைப்பாக உருவாக்கி, உச்ச சராசரி விற்பனையையும் நியாயமான பெறுமதியையும் அண்மித்துக் கொண்டு, வலயத்தில் நல்லதொரு மத்தியநாட்டு பாரம்பரியமிக்க தேயிலை உற்பத்தியாளராக உருவாக்குதல்.

### பணி

எம்மிடமுள்ள வளங்களை உச்சபட்சமாக பயன்படுத்தலும், அர்ப்பணிப்புடன் செயற்படலும், குழு எண்ணத்தை நிலைநிறுத்திச் செயற்பட்டு, எதிர்பார்க்கும் இலக்கினை அடைவதற்கு பணிமனையின் திறமையான மேம்பாட்டினுள் கைத்தொழிலில் நிரந்தர வளர்ச்சியை பெற்றுக் கொண்டு, நாட்டின் நல்விடயத்திற்காக அர்ப்பணிப்பு செய்தல்.

# ஜனதா எஸ்டேட்ஸ் மேம்பாட்டு வாரியம்
## ஆண்டு அறிக்கை 2016

**குறியீட்டு  பக்க எண்**


1. கார்ப்பரேட் தகவல் 1-3
2. தலைவரின் அறிக்கை 4 - 7
3. தணிக்கை & நிர்வாகக் குழு அறிக்கை 8 - 9
4. தணிக்கை அறிக்கை
   நிதி அறிக்கை 10 - 32
5. கணக்கியல் கொள்கைகள் 33 - 50
   - இருப்பு தாள் 51
   - லாபம் மற்றும் இழப்பு கணக்கு 52
   - பணப்பாய்வு அறிக்கை 53 - 54
   - நிதி அறிக்கைகளுக்கான குறிப்பு 55 - 83
6. தணிக்கை குவாரிகளின் வேறுபாடுகளை சரி செய்ய
   நடவடிக்கை மற்றும் 2016 ஆம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கைகள் 84 - 85
7. 2016 ஆம் ஆண்டிற்கான நிறுவனத்தின் செயல்திறன் சுருக்கம் 86 - 93
8. எதிர்பார்க்கப்படும் நடுத்தர காலத்தின் சுருக்கம்
   செயல்திறனை மேம்படுத்துவதில் 94
9. 05 ஆண்டுகளுக்கான ஒப்பீட்டு புள்ளிவிவரங்கள் 95
10. JEDB இன் கடமைகள் மற்றும் பொறுப்புகள் 96
11. சொத்தின் வளர்ச்சி JEDB க்கு சொந்தமானது 97 - 104
12. JEDB இன் கட்டமைப்பு 105
13. மனித வள விவரம் 106 - 107
14. மனித வள மேம்பாட்டுத் திட்டம் 108 -111
15. செயல் திட்டம் & முன்னேற்ற அறிக்கை 112- 113

# மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை

## வருடாந்த அறிக்கை - 2016

## நிறுவனத்தின் தகவல்

பெயர் :- மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை

சட்ட நிலைமை :- 1972 ஆம் இலக்க 11 ஆம் இலக்க அரசாங்க விவசாய கூட்டுதாபன சட்டத்திற்காக பணி நிமித்தம் அந்த சட்டத்தின் கீழான இலக்கம் 199/1 எம் மற்றும் 1976 ஆம் ஆண்டு மாசி மாதம் 06 ஆம் திகதியிலான வர்த்தமானி பிரகாரம் அரசாங்க நியதிச்சட்டமுறைமைக் கூட்டுத்தாபனமாக மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை தாபிக்கப்பட்டது.

அலுவலக பதிவு:- இல.55/75, வொக்சோல் ஒழுங்கை, கொழும்பு 02

கணக்காய்வாளர் :- கணக்காய்வாளர் தலைமையதிபதி

வங்கியாளர் :- இலங்கை வங்கி

மக்கள் வங்கி

பான் ஏசியா வங்கி

நேசன் ட்ர்ஸ்ட் வங்கி

பணிப்பாளர்கள்:- கலாநிதி கெனடி டீ குணவர்தன அவர்கள் தவிசாளர்
(2016 ஜனவரி தொடக்கம் நவம்பர் மாதம் வரை)

திரு. கீர்த்தி பீ. கொடகம அவர்கள் தவிசாளர்
(டிசம்பர் தொடக்கம்)

திரு. தரிக் ஒமர் - நிறைவேற்று பணிப்பாளர்

திருமதி. நிலுபா கருணாரத்ன – செயற்பாட்டு பணிப்பாளர்

திரு. நிலு தில்ஆர விஜேதாச அவர்கள் - பணிப்பாளர்

திரு. ஆனந்த கால்கே அவர்கள் - பணிப்பாளர்

திருமதி. தில்ஆர சேனானாயக்க – திறைசேரி பிரதிநிதி
(ஜனவரி தொடக்கம் செப்டம்பர் வரை)

திரு. எஸ்.எம். தயாரத்ன அவர்கள் - திறைசேரி பிரதிநிதி
(செப்டம்பர் தொடக்கம் ஒக்டோபர் வரை)

# மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை

## வருடாந்த அறிக்கை - 2016

### நிறுவனத்தின் தகவல்

### ஜனவசம பிரதான அலுவலகத்தின் முகாமைத்துவக் குழு

| | | | |
|---|---|---|---|
| 01) | திரு. ஹிரான் துனுவில<br>(ஜனவரி தொடக்கம் பெப்ரவரி) | - | பதில் பொது முகாமையாளர் |
| 02) | திரு லலித் அபேகோன்<br>(மார்ச் தொடக்கம்) | - | பதில் பொது முகாமையாளர் |
| 03) | திரு. மனோஜ் வீரசிங்க | - | பிரதான தொழிற்பாட்டு அலுவலர் (நவம்பர் வரை) |
| 04) | திரு. ஸ்ரீலால் குணசேகர | - | பிரதம கணக்காளர் (நவம்பர் வரை) |
| 05) | திருமதி. கிர்ஸ்மி நானயக்கார | - | உள்ளக கணக்காய்வாளர் (நவம்பர் வரை) |
| 06) | திரு. சம்பத் தயாரத்ன | - | மதிப்பீட்டு அலுவலர் (நவம்பர் வரை) |
| 07) | திரு எம் சீ பிரேமதிலக | - | முகாமையாளர்-போக்குவரத்து/பராமரிப்பு |
| 08) | திரு. கே.ஜே.டீ.பீ. ராஜசூரிய | - | கணக்காளர் - பிரதான அலுவலகம் |
| 09) | திருமதி நயனா ரணசிங்க | - | கணக்காளர் |
| 10) | திருமதி. எஸ்.டீ.டபி.அலேன்சு | - | முகாமையாளர் -நீதி (ஜனவரி வரை) |
| 11) | திரு. டபி.எம்.ஈ.எஸ்.பீ. கந்தேகம | - | முகாமையாளர் நீதி(நவம்பர் வரை) |
| 12) | திரு. ரொஹான் பம்பரதெனிய | - | முகாமையாளர் பிராந்தி அலுவலகம் |
| 13) | திரு. ஆர்.எம்.டீ.எஸ்.எஸ் ராஜபக்ச | - | உதவி. உள்ளக கணக்காய்வாளர் |
| 14) | திரு. எஸ்.ஏ.எல். பெரேரா | - | உதவி . கணக்காளர் |
| 15) | திரு. எச். ஜி. அனுர | - | உதவி. முகாமையாளர் - சந்தைப்படுத்தல் |
| 16) | திரு. டபி.ஜீ.பீ.வாதுவகே | - | உதவி. முகாமையாளர் - சந்தைப்படுத்தல் |
| 17) | திரு. கே.ஏ.என். பெரேரா | - | உதவி. முகாமையாளர் |
| 18) | திருமதி. சீ.எச். ரெட்டியல | - | உதவி. முகாமையாளர் |
| 19) | திரு. ஆர்.டபி.எம்.எம். ஹலாங்கொட | - | உதவி. முகாமையாளர்(பிராந்திய அலுவலகம்) |
| 20) | திரு. நாமல் விஜேதுங்க | - | பதில் முகாமையாளர் வனவளர்ப்பு |

# மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை

## வருடாந்த அறிக்கை – 2016

### நிறுவனத்தின் தகவல்

## தோட்ட முகாமைத்துவ குழு

| தோட்டம் | பொறுப்பு முகாமையாளர் | பயிர் | விஸ்தீரணம் ஹெக் | முகவரி |
|---|---|---|---|---|
| போபிட்டிய | திரு கே.ஜீ.எச். கொஸ்சின்னா | தேயிலை | 321.00 | தெல்தோட்டை |
| போஹில் | திரு ஏ.எம்.டீ.ஐ ராஜகருனா | தேயிலை | 490.01 | கெட்டபுலா |
| தெல்தோட்டை | திரு புபுது ராஜபக்ச | தேயிலை | 410.10 | கலஹா |
| கலபொட | திரு ஏ.பீ.ஆர்.குமார | தேயிலை | 752.75 | கலபொட |
| கிரேட் வெளி | திரு.டீ.சீ.கொடிதுவக்கு | தேயிலை | 465.21 | தெல்தோட்டை |
| ஹந்தான | திரு திரு. நிசாந்த ராஜ் | தேயிலை | 1405.63 | கண்டி |
| ஹேரப் | திரு. என்.எஸ் அதுகோரல | தேயிலை | 654.06 | ஹேவாஹெட்ட |
| கந்தலோயா | திரு டீ.பீ.எஸ்.எல்.பெரேரா | தேயிலை | 930.79 | நாவலபிட்டிய |
| கொலபத்தன | திரு. டபி.சீ.எஸ்.பண்டார | தேயிலை | 361.00 | நாவலபிட்டிய |
| லெவலன் | திரு சீ. டி.. அலுவிஹாரே | தேயிலை | 1,255.92 | புப்புரஸ்ஸ |
| லூல்கந்துர | திரு. எல்.பீ. அபேகோன் | தேயிலை | 1,048.03 | தெல்தோட்டை |
| மஹவில | திரு ஹர்சகுமார | தேயிலை | 293.64 | உலபனை |
| மவுன்ட்ஜீன் | திரு.என். ஹெட்டிஆரச்சி | தேயிலை | 301.67 | வடவல |
| நாகஸ்தென்ன | திரு ஏ.எஸ் தயாரத்ன | தேயிலை | 506.82 | நாவலபிட்டிய |
| ரஹதுங்கொட | திரு புலசிங்க | தேயிலை | 480.14 | ஹேவாஹெட்ட |
| ரொக்வூட் | திரு ஐ.எம்.ஏ.டீ.பி. இலங்ககோன | தேயிலை | 426.67 | ஹேவாஹெட்ட |
| குமாரவத்த | திரு எஸ். எம். சீ. பி. எகொடவெல | இறப்பர் | 1,822.46 | மொனராகலை |
| பளை | திரு. எஸ்.எச்.எஸ்.ஜ சமரசிங்க (வேலை நோக்குனர்) | தெங்கு | 682.19 | பளை |
| தியலும | திரு ஏ.ஏ.கே.விஜேசூரிய (வேலை நோக்குனர்) | இறப்பர் | 204.09 | கொஸ்லந்த |
| தெலிபதென்ன | திரு. எஸ்.எம்.எஸ்.டீ. உனுகல (வேலை நோக்குனர்) | இறப்பர் | 85.51 | நிகபொத |

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை

ஆண்டறிக்கை – 2016

## தவிசாளரின் செய்தி

2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற நிதியியல் ஆண்டிற்கான மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் இவ் ஆண்டறிக்கையினையும் கணக்காய்வு செய்யப்பட்ட கணக்கறிக்கைகளையும் சமர்ப்பிப்பதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

தேயிலை உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட குடிபானமாகும். இது உலகின் இரண்டாவது மிக பிரபல்யமிக்க குடிபானமாகும்.அடிப்படையில், தேயிலை அநேகமாக எந்நிலைமையிலும் செயலாற்றுகின்றது. இது குளிரச் செய்யப்பட்ட தேனீர், சூடான தேநீர் அல்லது குளிர் தேநீர்,பொதியில் அடைக்கப்பட்ட தேயிலை அல்லது பொதி செய்யப்படாத தேயிலை போன்ற பல்வேறு வடிவங்களில் கிடைக்கப்பெறுகின்றது.

உற்பத்தி மட்டங்கள், வீழ்ச்சியான ஏற்றுமதி மட்டங்கள், காலநிலை மாற்றம், போட்டிச் சூழல் போன்றன 2016 ஆம் ஆண்டிற்கு கணிசமான தாக்கத்தினை ஏற்படுத்தியிருந்தமையின் காரணமாக இலங்கைத் தேயிலை கைத்தொழில் சவால் மிக்க ஆண்டுக்கு முகம் கொடுத்தது.

2016 ஆம் ஆண்டிற்கான இலங்கை மொத்த தேயிலை உற்பத்தி 2015 இல் அதே காலப் பகுதிக்கான 328.8 மில்லியன் கி.கி உடன் ஒப்பிடுகையில் 292.4 மில்லியன் கி.கி இணை பதிவு செய்தது. (-36.45 கிகி) உற்பத்தியானது 36.4 கி.கி இனால் வீழ்ச்சியடைந்ததனால் 2015 ஆம் ஆண்டின் அதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் ஏற்றுமதி 18.19 மில்லியன் கி.கி இனால் குறைவடைந்துள்ளது. இது ஏற்றுமதிகளுக்கான தேயிலை பற்றாக்குறைபொன்றினை தோற்றுவித்தது.

2016 ஆம் ஆண்டுக்காக விற்பனை செய்யப்பட்ட மொத்த தேசிய தேயிலை சராசரி 2015 இல் அதே காலப்பகுதிக்கான ரூபா 402,14 (ஐஅ.டொலர் 2.96) உடன் ஒப்பிடுகையில் கிலோவொன்றிற்கு ரூபா 468.61 (ஐ.அ.டொலர் 3.22 ஆக இருந்தது) (+ரூபா 66.47). உற்பத்தியின் 60% உடனான பாரிய சந்தை பங்கினை கொண்டுள்ள தாழ் நில வளர் தேயிலை ரூபா +70.42 துரித அதிகரிப்புடன் மத்திய நில வளர் தேயிலைரூபா +57.02 அதிகரிப்பினையும் பதிவு செய்து உயர் நில தேயிலை ரூபா +61.47 அதிகரிப்பொன்றினையும் பதிவு செய்தது. 2016 சனவரி திசெம்பர் வரையான ஒன்றுதிரண்ட காலப்பகுதிக்காக தாழ் நிலத் தேயிலை ரூபா 486.74 சராசரியாக இருந்தது. மத்திய நிலத் தேயிலை ரூபா 419.59 இனை பதிவு செய்ததுடன். உயர் நிலம் ரூபா 449.85 ஆக இருந்தது.

2016 சனவரி முதல் திசெம்பர் காலப் பகுதிக்கான இலங்கை தேயிலை ஏற்றுமதி 288.88 மில்லியன் கிலோ கிராம் ஆக இருந்தது. இது கடந்த கால அதே காலப் பகுதியுடன் ஒப்பிடுகையில் 18.19 மில்லியன் வீழ்ச்சியொன்றாகும். 2016 சனவரி தொடக்கம் திசெம்பர் வரையான காலப் பகுதிக்காக இலங்கை தேயிலையின் பாரிய இறக்குமதியாளராக ரஷ்யா காணப்பட்டதனையும் அதனை தொடர்ந்து முறையே ஈரான் மற்றும் ஈராக் காணப்பட்டதையும் தேயிலை சந்தை அறிக்கைகள் காண்பிக்கின்றன.

2016 சனவரி முதல் திசெம்பர் காலப் பகுதிக்கான மொத்த ஏற்றுமதி வருவாய் ரூபா 184.78 பில்லியன் ஆக இருந்ததுடன் கடந்த ஆண்டின் அதே காலப் பகுதிக்கு எதிராக ரூபா 2.72 பில்லியன் கொண்ட (+1.50%) கொண்ட சிறு அதிகரிப்பொன்றினை காண்பிக்கின்றது.

எரிபொருள் விலைகள் மற்றும் மேற்கத்தேய தடைகளின் தொடர்ச்சி ஆகிய இரண்டு அதிர்வுகளுக்கு மத்தியிலும் கடந்த ஆண்டில் ரஷ்ய பொருளாதாரம் உத்வேகமடைந்தது.

அளவு மதிப்புக்கு அமைவாக 2016 ஆம் ஆண்டில் இலங்கை தேயிலை ஏற்றுமதி செய்துள்ள முதல் 10 நாடுகளாக ரஷ்யா (ஐ.அ.டொலர் 611.9 மில்லியன் மற்றும் மொத்த இறக்குமதியில் 10.3% ஐக்கிய அமெரிக்கா (ஐ.அ.டொலர் 468 மில்லியன் மற்றும் மொத்த இறக்குமதியில் 7.9%) ஐக்கிய இராச்சியம் (ஐ.அ.டொலர் 400.9 மில்லியன் மற்றும் மொத்த இறக்குமதியில் 6.8%) சவுதி அரேபியா (ஐ.அ.டொலர் 255.7 மில்லியன் மற்றும் மொத்த இறக்குமதியில் 4.3%)ஈரான் (ஐ.அ.டொலர் 251.3 மில்லியன் மற்றும் மொத்த இறக்குமதியில் 4.2%) மொரோக்கோ (ஐ.அ.டொலர் 232.7 மில்லியன் மற்றும் மொத்த இறக்குமதியில் 3.9%) ஜார்மனி (ஐ.அ.டொலர் 221.7 மில்லியன் மற்றும் மொத்த இறக்குமதியில் 3.7%) யப்பான் (ஐ.அ.டொலர் 174 மில்லியன் மற்றும் மொத்த இறக்குமதியில் 2.9%) பிரான்ஸ் (ஐ.அ.டொலர் 166.2 மில்லியன் மற்றும் மொத்த இறக்குமதியில் 2.8%) ஐக்கிய அரபு இராச்சியம் (ஐ.அ.டொலர் 163.2 மில்லியன் மற்றும் மொத்த இறக்குமதியில் 2.7%) என்பனவாக இருந்த அதேவேளை இலங்கை உலகின் மூன்றாவது பாரிய தேயிலை ஏற்றுமதி நாடாக இருந்து வருகின்றது.

13 தேயிலை தோட்டங்களும் 4 தேயிலை தொழிற்சாலைகளும் 03 இறப்பர் தோட்டங்களும் 01 தென்னம் தோட்டமும் 2016 ஆம் ஆண்டின் போது தொழிற்பட்டன.

2016 ஆம் ஆண்டிற்கான மொத்த மதிப்பிடப்பட்ட விளைச்சல் (தயாரிக்கப்பட்ட தேயிலை – 2,271,900 கிலோ கிராம் ஆகும்.) காலப் பகுதியின் போது 1,314,089.5 கிலோ கிராம் விளைச்சல் (தயாரிக்கப்பட்ட தேயிலை அடையப் பெற்றதுடன் வேறுபாடு -42.16 வீதமாக பதிவாகியிருந்தது.) 2016 ஆம் ஆண்டுக்காக உற்பத்திச் செலவின் மொத்த சராசரி ரூபா 473.97 ஆக மதிப்பிடப்பட்டிருந்ததுடன்,ரூபா 602.81 உண்மையாக பதிவாகியிருந்தது. 2016 ஆம் ஆண்டுக்கான மொத்த தேறிய விற்பனை சராசரி ரூபா 293.75 ஆக மதிப்பிடப்பட்டிருந்ததுடன்,ரூபா 326.61 உண்மையாக பதிவாகியிருந்தது. 2016 ஆம் ஆண்டுக்கான மொத்த விளைச்சல் (தயாரிக்கப்பட்ட தேயிலை) 2,271,900 கி.கி ஆக மதிப்பிடப்பட்டிருந்ததுடன்,ரூபா 1,314,090 கி.கி உண்மையாக பதிவாகியிருந்தது. 2016 ஆம் ஆண்டுக்கான ஹெக்டயர் ஒன்றிற்கான விளைச்சல் 619 கி.கி ஆக மதிப்பிடப்பட்டிருந்ததுடன், 358 கி.கி உண்மையாக பதிவாகியிருந்தது. 2016 ஆம் ஆண்டுக்கான கிலோ ஒன்றிற்கான உற்பத்திச் செலவு ரூபா 437.97 ஆக ஆக மதிப்பிடப்பட்டிருந்ததுடன்,ரூபா 602.81 உண்மையாக பதிவாகியிருந்தது. 2016 ஆம் ஆண்டுக்கான கிலோ ஒன்றிற்கான தேறிய விற்பனை சராசரி ரூபா 293.75 ஆக மதிப்பிடப்பட்டிருந்ததுடன்,ரூபா 326.61 உண்மையாக ஆக மதிப்பிடப்பட்டிருந்ததுடன்,ரூபா 180.22 உண்மையாக பதிவாகியிருந்தது. 2016 ஆம் ஆண்டிற்காக தேறிய இலாபம் / நட்டம் ரூபா 425,605,201 ஆக மதிப்பிடப்பட்டிருந்ததுடன் ரூபா 383,844,742 உண்மையாக பதிவாகியிருந்தது.

இக் காலப் பகுதியின் போது 03 இறப்பர் தோட்டங்கள் தொழிற்பட்டதுடன், அவை குமாரவத்த வத்த, தியளும மற்றும் தெளிபொத்தென்னே என்பனவாகும். இக் காலப் பகுதியின் போது குமாரவத்த தோட்டம் 309,306 கிகி இறப்பரினை பதிவு செய்ததுடன், தெளிபொத்தென்ன தோட்டம் இக் காலப் பகுதியின் போது 13,385 கி.கி கொண்ட ஆகக் குறைந்த விளைச்சலினை பதிவு செய்தது. ஆகக் குறைந்த மொத்த இலாபம் / நட்டம் ரூபா (1,821,151) கொண்டது தியளும தோட்டத்தினால் பதிவு செய்யப்பட்டதுடன், அதிகூடிய இலாபம் /நட்டம் ரூபா (17,874,794 குமாரவத்த தோட்டத்தினால் பதிவு செய்யப்பட்டிருந்தது. ஆகக் குறைந்த உற்பத்திச் செலவு ரூபா 271.38 ஆக குமாரவத்த தோட்டத்தினால் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன், ஆகக் கூடிய உற்பத்திச் செலவு ரூபா 546.38 ஆக தெளிபொத்தென்ன தோட்டத்தினால் பதிவு செய்யப்பட்டிருந்தது. ரூபா 204.69 கொண்ட ஆகக் குறைந்த விற்பனைச் சராசரி தெளிபொதென்ன

தோட்டத்தினால் பதிவு செய்யப்பட்டிருந்ததுடன்,ரூபா 206.00 கொண்ட ஆகக் கூடிய தேறிய விற்பனை சராசரி தியளும தோட்டத்தினால் பதிவு செய்யப்பட்டிருந்தது.

அரசாங்கத் துறை மற்றும் அரை அரசாங்கத் துறை உத்தேச கூலிகள் அதிகரிக்கப்பட்டன. இவ் அதிகரிப்பிற்கு 2015 இன் போது நடைமுறைப்படுத்தப்பட்ட ரூபா 10,000 இற்கான இடைநிலை கொடுப்பனவு அதிகரிப்பில் படிப்படியான அதிகரிப்பு பிரதான காரணமாக இருந்ததுடன், 2016 ஏப்ரல் 25 ஆந் திகதிய 02/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் அடிப்படையில் 2016 இல் அடிப்படை சம்பளத்திற்கு இடைக்கால கொடுப்பனவின் பாகம் ஒன்றினை உற்சேர்க்கப்பட்டது. இச் சுற்றறிக்கையின் தாக்கத்தின் காரணமாக அனைத்து நியதிச் சட்டப் பங்களிப்புகளும்(உ.சே.நி/உ.ந.நி பணிக்கொடை) மற்றும் கொடுப்பனவுகள் மேலதிக நேர வீதங்கள் என்பன தானாக அதிகரித்து சம்பளச் செலவுக்கும் நிறுவனதின் இலாபத்திற்கும் நேரடியாக தாக்கத்தினை ஏற்படுத்தியது.

வர்த்தக கூட்டுத்தாபனம், நியதிச் சட்ட சபைகள் மற்றும் அரசிற்கு உரித்தான கம்பனிகளிலுள்ள அலுவலர்களுக்கான போக்குவரத்து வசதிகள் தொடர்பான 2016 ஒக்தோபர் 27 ஆம் திகதியிடப்பட்ட பிஈ 01 / 2015 ஆம் இலக்க பொதுத் தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை மூலம் 2016 நவம்பர் 01 ஆம் திகதி தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் ரூபா 20,000 இனால் அதிகரிக்கப்பட்டது. இவ் அதிகரிப்பும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் சம்பளப் பட்டியல் மற்றும் இலாபத் தன்மையினை நேரடியாகப் பாதித்தது.

பெருந்தோட்ட பதவியினருக்கான தற்போதைய கூட்டு ஒப்பந்தம் 2016 செப்தம்பர் 03 அன்று காலவதியானது. தொழிற்சாலை பதவியினர் மற்றும் இணைந்த தர சம்பளங்களை சீரமைப்பதற்கு நாம் இலங்கை தோட்டப் பதவியினர் ஒன்றியத்துடன் புதிய ஒப்பந்தத்தினை கைச்சாத்திடவுள்ளோம். இதுவும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு குறிப்பிடத்தக்க தாக்கமொன்றினை கொண்டிருக்கும். சொல்லப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2017 மார்ச் 01 ஆம் திகதி நடைமுறைக்கு வரும் வகையில் சம்பளம் 25% இனால் அதிகரிப்பதற்கு இணக்கம் ஏற்பட்டுள்ளதுடன், இதே சம்பள அதிகரிப்பினை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இவ் அதிகரிப்பும் விரைவில் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்கு பாரிய சுமையொன்றாக இருக்கும். சம்பள அதிகரிப்பு நடைமுறைப்படுத்தப்பட்ட உடனடியாக மேலதிக கொடுப்பனவு வீதங்களும் நியதிச் சட்ட (உ.சே.நி. உ.ந.நி பணிக்கொடை போன்றன) கொடுப்பனவுகளும் தானாக அதிகரிக்கும். மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் சட்டத்தினை கூர்ந்து ஆராய்கின்ற போது பணிப்பாளர் சபை சந்தை தேவைப்பாடுகளுக்கு பொருந்துவதற்கு பல்துறை சார்ந்த பிரதிநிதித்துவமொன்றை வேண்டுகின்றது.

இறுதியாக நான் மேற் சொன்ன விடயங்கள், தொழிற்சாலை கணக்குகள், இறுதிக் கணக்குகளை ஆய்வு செய்து தலைமை அலுவலகம், பிராந்திய அலுவலகம் மற்றும் தொழிற்சாலைகளின் நாளாந்த நடவடிக்கைகளை கண்காணித்து கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு நடவடிக்கைகளை கண்காணித்ததுடன், அறிக்கை தயாரிக்கப்படும் நேரத்தில் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையானது மிக இக்கட்டான நிலையில் காணப்படுகின்றது என்பதனை அவதானித்தேன். தற்போதைய நிலைமையின் காரணமாக தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவினை உடனடியாக ,ஏற்படுத்துவதற்கு மக்கள் தோட்ட அபிவிருத்தி சபைக்காக மீள் கட்டமைப்பு நிகழ்ச்சித் திட்டமொன்றினை (அதாவது மேலதிக ஊழியர்களுக்கு சுய ஓய்வுத் திட்டமொன்றினை அறிமுகப்படுத்துவதற்கும் தேயிலை காணிகளை இடர்நேர்வுள்ள, குறைந்த இடர்நேர்வான, நடு நிலையான மற்றும் சராசரியான அத்துடன் இலாபம் உழைக்கின்ற போன்றவனாக வகைப்படுத்துவதற்கும் குத்தகைக்கு விடுவதற்கு அல்லது வருமானம் உருவாகுவதற்கானஏதேனும் வேறு மாதிரிகளை அறிமுகப்படுத்துவதற்கு அவசியமான

முழுங்குகளை மேற்கொள்வதற்கு அத்துடன் பயன்படுத்தப்படாத அலுவலக இடவசதிகள் போன்றவற்றிக்காக அதனை பிரயோகிப்பதற்கும்) வலுவாக பரிந்துரைக்கப்பட்டுள்ளது. மீள் கட்டமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தினை தொடர்வதற்கான செயன்முறைக்காக அண்ணளவாக ரூபா 3000 மில்லியன் தேவையாகும். சொல்லப்பட்ட மூலதன உற்செலுத்தலினை பெற்றுக்கொள்ள முடியாதிருப்பின் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை நீண்டகாலம் நிலைத்திருக்க முடியாது. என்பதுடன், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் ஊழியர்களும், நீடிக்க மாட்டார்.

கடுமையான தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு பிரச்சினையின் அடிப்படையில் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையானது பெருந்தோட்ட அபிவிருத்தி அமைச்சின் கவனத்திற்கு கொண்டுவருவதற்கு ஆரம்ப நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதுடன், இதன் ஊடாக பொதுத் திறைசேரியின் கவனத்திற்கு கொண்டு வர வேண்டும். மேலும் பன்முகப்படுத்தப்பட்ட அடிப்படையொன்றில் நம்பகமான மீள் கட்டமைப்பிற்கு உட்படுவதற்கும் இதன் வாயிலாக கட்டமைப்பு மாற்றம், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் மீள் கட்டமைப்பின் அத்தியவசிய அம்சங்காளாக உள்ளக நிறுவன ஆளுகை செயன்முறைகள் என்பனவற்றை மையமாக கொண்ட செயலாற்றுகையினை அளவிடுவதற்கும் நான் வலுவாக பரிந்துரைக்கின்றேன்.

முடிவுரையாக மீள் கட்டமைப்புத் திட்டத்தின் அடிப்படையிலும் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் தொழிற்பாட்டு விடயங்கள் கட்டமைப்புகள் மற்றும் இணையப்பெற்ற செலவுகளை குறைப்பதற்கும் முதலீடுகள் மீதான வருவாய்களை உச்சப்படுத்துகின்ற அதேவேளை மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை கவனம் செலுத்துகின்ற மைய தொழிற்பாடுளிலும் எளிதாக்கப்பட வேண்டும்.

மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் பணிப்பாளர் சபை சார்பில் அரசாங்கம் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சின் கௌரவ அமைச்சர் மற்றும் செயலாளர் அத்துடன் அலுவலர்கள் மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் தேயிலை தொழிலாளர்கள் மற்றும் அவர்களது குடும்பங்கள், மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையின் முகாமைத்துவ அணி, தொழிற்சாலை / கண்காணிப்பாளர்கள் மற்றும் அனைத்து பதவியினர், தரகர்கள், வாடிக்கையாளர்கள், இலங்கை நடுகையாளர் சங்கம் மற்றும் தொழிற்சங்கங்கள் போன்றவற்றிக்கு மக்கள் பெருந்தோட்ட சபையின் வெற்றியினை உறுதி செய்வதற்கான அவர்களது அர்ப்பணிப்புக்கும் அயராத முயற்சிகளுக்கும் அதே போன்று கடந்த வருடத்தில் அவர்கள் வழங்கிய தொடர்ச்சியான ஆதரவிற்கும் எனது உண்மையான நன்றியினை பதிவு செய்கின்றேன்.

மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையினை முன்னெடுப்பதனை நோக்கிய அவர்களது பெறுமதி வாய்ந்த ஆலோசனைகளுக்காக எனது பணிப்பாளர் சபையின் சக உறுப்பினர்களுக்கும் நன்றி கூறுகின்றேன்.

கீர்த்தி பி கொடகம
தலைவர்

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை

ஆண்டறிக்கை 2016

# கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்ட அறிக்கை

## கணக்காய்வு கூட்ட அறிக்கை

கணக்காய்வு குழுவின் வகிபாகமானது அக்கறைதாரர்களின் நலன்களை பாதுகாக்கும் நோக்குடன் சபையின் நிதியியல் அறிக்கையிடும் முறைமையினை மேற்பார்வை செய்வதாகும். கணக்காய்வு குழுவினால் வேண்டப்படும் உத்தரவாத கட்டமைப்பானது முகாமைத்துவ அறிக்கைகள், உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வு என்பவற்றிலிருந்தான துணையளிப்பு பங்களிப்புகளின் மூலம் வழங்கப்படுகின்றது.

குழுவின் உள்ளடக்கம்.

சுயாதீன நிறைவேற்றுத் தரமல்லாத பணிப்பாளர்கள் 3 நிறைவேற்றுத்தரமல்லாத பணிப்பாளர்கள்

1. கணக்காய்வு குழுவானது சிறந்த ஆளுகையுடன் தொடர்புபட்ட அவர்களது பொறுப்புகளை நிறைவேற்றுவதில் சபைக்கு உதவுவதன் நோக்கமாக தாபிக்கப்பட்டது. குழு பின்வருவோரை உள்ளடக்குகின்றது.

திரு. எஸ்.எம். தயாரத்ன – தலைவர் - சுயாதீன நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்

திரு. நிலு தில்ஹார விஜயதாச – நிறைவேற்றுதரமல்லாத பணிப்பாளர்

திரு. கல்லேராச்சி – சுயாதீன நிறைவேற்றுத்தரமற்ற பணிப்பாளர்

திரு.எம்.பீ. குமார – கணக்காய்வு கண்காணிப்பாளர் - கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் திணைக்களம்

கிருஸ்னி நாணயக்கார – கணக்காய்வு குழுவிற்கான செயலாளராக உள்ளக கணக்காய்வாளர் தொழிற்படுகின்றார்.

**முக்கிய நோக்குகள்.**

கணக்காய்வு குழுவானது நிதியியல் அறிக்கையிடல் செயன்முறைகளில் சுயாதீன மற்றும் குறிக்கோள் மிக்க மீளாய்வொன்றினை வழங்குதலில் ஊடாக அவர்களது கடமைகளை நிறைவேற்றுவதில் சபைக்கு உதவுவதன் மீது முதன்மையாக கவனம் செலுத்துகின்றது. கணக்காய்வு குழு கூட்ட நடவடிக்கை முறைகள் சபை கூட்டங்களில் முன்வைக்கப்படுவதுடன், அனைத்து முக்கிய விடயங்கள் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், எய்தப்பட்ட பெறுபேறுகள் அல்லது முடிவுறாதுள்ளவை மற்றும் ஆரம்பிக்கப்பட்ட பின்தொடர் நடவடிக்கைகள் என்பன தெளிவுபடுத்தப்பட்டு கலந்துரையாடப்பட்டு அவற்றுக்கான சபை அனுமதி பெற்றுக்கொள்ளப்படுகின்றது.

வெளிவாரி கணக்காய்வாளர்களுடனான கூட்டங்களும் இடைத் தொடர்புகளும் குழு மீளாய்வுக்குட்படுகின்ற ஆண்டின் போது 02 தடவைகள் கூடியதுடன், உறுப்பினர்களின் கணக்காய்வு குழு கூட்டத்திற்கான வரவு பின்வருமாறு.

| பெயர் | 2016 யூலை 13 | 2016 ஒக்தோபர் 06 |
|---|---|---|
| எஸ்.எம் தயாரத்ன (தலைவர்) | ✓ | ✓ |
| நிலு தில்ஹார விஜயதாச | ✓ | ✓ |
| திரு கல்லேயாரச்சி | ✓ | ✓ |

மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபை

ஆண்டறிக்கை 2016

குழு உறுப்பினர்களுக்கு மேலதிகமாக கூட்டத்தில் பதில் பொது முகாமையாளர் கணக்காளர்கள், சட்ட முகாமையாளர், காணி முகாமையாளர் மற்றும் உள்ளக கணக்காய்வாளர் போன்றோர் அழைப்பின் பேரில் கலந்து கொண்டனர்.

குழுவானது ஆண்டு முழுவதும் முழு நேர அடிப்படையில் பெருந்தோட்ட துறையினை தளமாகக் கொண்டுள்ள கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பிரதிநிதிகளுடன் தொடர்ச்சியான இடைத் தொடர்புகளை கொண்டுள்ளது.

ஆண்டறிக்கை 2016 இரண்டு கூட்டங்களின் போதும் பின்வரும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

- வெளிவாரி கண்காய்வாளர்களினால் எழுப்பப்பட்ட முடிவுறாதுள்ள கணக்காய்வு வினவல்களுக்கான முடிவுறாதுள்ள பதில்கள்.
- அனுமதிக்கப்பட்ட பதவியணிக்கு அமைவாக ஆட்சேர்ப்புத் திட்டத்தினை தயாரித்தலும் கடமை அட்டவணையினை பகிர்ந்தளித்தலும்
- 2015.12.31 முடிவுற்ற ஆண்டுக்கான இறுதிக் கணக்காய்வுகளை தயாரித்தலும் வெளிவாரி கணக்காய்வாளர்களுக்கு நிதியியல் கூற்றுகளை சமர்ப்பித்தல். இலங்கை நிதியிடல் அறிக்கைக்கு அமைவாக கணக்கீட்டு கொள்கைகளின் பொறுத்தப்பாடும் மாற்றங்களும் மற்றும் நிதியியல் கூற்றுகளை எடுத்துரைத்தலும்
- முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய மாற்றங்களும் தீர்வுகளும்
- தொட்புடைய கணக்கீட்டு தர நியமங்களும் ஏற்புடைய ஒழுங்குமுறைப்படுத்தல் தேவைப்பாடுகளுடனும் இணங்குதல்.
- நிலையான சொத்து பதிவேடு ஒன்றினை தயாரித்தல்.
- உள்ள கணக்காய்வு திட்டத்திற்கு அமைவாக தோட்டங்களை கணக்காய்வு செய்தல்
- 2011 ஆம் ஆண்டிலிருந்து தற்போது வரை ஆண்டறிக்கைகளை சமர்ப்பித்தல்
- கேள்வி வழிகாட்டல்கள் மற்றும் குறிப்பான அனுமதிகள் என்பவற்றின் பிரகாரம் அறுப்பு மரங்களை அறுவடை செய்தல்

<u>உள்ளகக் கணக்காய்வு</u>

குழுவானது அதன் பணிகள் தொடர்பான பெறுபேறுகள் மற்றும் அதன் பரிந்துரைகளுக்கான முகாமைத்துவ பதிலிறுப்புகள் என்பவற்றை கண்காணிப்பதன் மூலம் உள்ளக கணக்காய்வு தொழிற்பாட்டின் வகிபாகத்தினையும் செயல்திறனையும் மீளாய்வு செய்ய பொறுப்புடையதாகும் கணக்காய்வு குழுவானது ஆண்டின் போது இரு தடவைகள் உள்ளக கணக்காய்வாளர்களுடன் கூடுவதுடன் தொழிற்பாடுகளின் வேறுபட்ட விடயப்பரப்புகளுடன் இணைந்துள்ள இடர்களையும் உள்ளக கட்டுப்பாடுகளின் செயல்திறன்தன்மையினையும் இனங்காணும் பொருட்டு அவர்களின் காண்புகளை இனங்காண்கின்றது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය எனது இல. My No. | பீஎல்ஏ/ஏ/ஜோடிபி/ 01/16 | මගේ අංකය உமது இல. Your No. | | දිනය திகதி Date | 2018 யூன் 12 |

தலைவர்,
பெருந்தோட்ட அபிவிருத்திச் சபை

**பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

பெருந்தோட்ட அபிவிருத்திச் சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுக்கள் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்றுக்கள், உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒருங்கிணைந்த நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1972 இன் 11 ஆம் இலக்க அரச கைத்தொழில் கூட்டுத்தாபன அதிகாரச்சட்டத்தின் 23 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும், இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச் சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விபரமான ஒரு அறிக்கை சபையின் தலைவருக்கு 2018 சனவரி 12 ஆந் திகதி வழங்கப்பட்டது.

1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்படும் கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்கள் மீதான அபிப்பிராயத்தை வழங்குவது எனது பொறுப்பாகும்.

1.4 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

இவ்றிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் பெறுபேறாக நிதி நிலமைக்கூற்றிலும் வருமானக் கூற்றிலும் உரிமை மூலதன மாற்றக் கூற்றிலும் காசுப் பாய்ச்சல் கூற்றிலும் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்களும் மூலாதாரங்களுக்குரிய எந்தவொரு சீராக்கல்களுக்குமான அவசியம் இருந்ததா என்பதை என்னால் தீர்மானிக்க முடியாது போனது.

2. நிதிக்கூற்றுக்கள்

2.1 அபிப்பிராய மறுப்பு

இவ்வறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக்காட்டப்பட்ட விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையை வழங்குவதற்கு போதுமான மற்றும் உசிதமான கணக்காய்வுச் சான்றை என்னால் பெற முடியாதுள்ளது. அதன் காரணமாக, இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவில்லை.

2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

2.2.1 நிறுவனம் தொடர்ச்சியாக நிலைத்திருத்தல்

சபைக்குச் சொந்தமான 23 தோட்டங்கள் தொடர்ச்சியாக நட்டம் அடைந்து வருவதன் அடிப்படையிலும் செலுத்த வேண்டிய நியதிச்சட்ட பொறுப்புக்களின் அளவு அதிகரித்துக் காணப்படுதலின் காரணமாகவும் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சபையின் தேறிய சொத்துக்களும் தொழிற்படு மூலதனமும் முறையே ரூபா 340,140,366 மற்றும் ரூபா 1,845,703,984 மறைப் பெறுமதியைக் கொண்டிருந்தன. அதற்கிணங்க முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் தேறிய சொத்துக்களின் வீழ்ச்சி 37 சதவீதம் மற்றும் தொழிற்படு மூலதனத்தில் வீழ்ச்சி 5 சதவீதமாக இருந்ததுடன் இவ்வாறான நிலைமையின் அடிப்படையில் மேலும் திறைசேரியின் அல்லது அரசாங்கத்தின் நிதி உதவியின்றி சபையினைப் பேணி வருதலில் நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது.

2.2.2 இலங்கை கணக்கீட்டு நியமம்

பின்வரும் இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 01

பொதுப் பாவணைப் பிரிவின் ரூபா 13,002,883 தொகையான கடன்பட்டோர் மீதியில் அறவிடமுடியாக் கடனாக ரூபா 857,604 ஒதுக்கீடு செய்தல் இடம்பெற்றிருந்தும் அது குறிப்புக்கள் மூலம் வெளிப்படுத்தப்படாது தேறிய பெறுமதியான ரூபா 12,145,279 மாத்திரம் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 07

(i) மீளாய்வாண்டில் பணமாகச் செலுத்தப்படாத ரூபா 196,480 தொகையான நியதிச்சட்ட கொடுப்பனவுகளுக்குரிய மிகைக் கட்டணச் செலவுகள் நியமத்தின் 20 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியற்ற ஒரு விடயமாக காசுப் பாய்ச்சல் கூற்றில் வரிக்கு முன்னைய நட்டத்தில் செம்மையாக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டிற்காக பணமாகப் பெற்றுக்கொள்ளப்பட்ட வட்டி வருமானம் ரூபா 71,130 தொகையானது வரிக்கு முன்னைய நட்டத்திலிருந்து கழிக்கப்பட்டு முதலீட்டு நடவடிக்கைகளின் கீழ் காசு உட்பாய்ச்சலாகக் காட்டப்பட வேண்டிய போதிலும் வரிக்கு முன்னைய நட்டத்துடன் கூட்டிக்காட்டப்பட்டிருந்தது.

(iii) அரசாங்கத்தின் வணிக வங்கிகளிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட வங்கி கடனுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 16,443,117 தொகையான கடன் தீர்த்து வைக்கப்பட்டிருந்தும் காசுப் பாய்ச்சல் கூற்றில் காசு நடவடிக்கைகளின் கீழ் அது ரூபா 15,150,616 காசு வெளிப்பாய்ச்சலாகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக காசு வெளிப்பாய்ச்சல் ரூபா 1,292,501 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(iv) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பணிக்கொடைக்காக ஒதுக்கீடு செய்தல் பணமாகச் செலுத்தப்பட்ட பணிக்கொடையின் பெறுமதி என்பன முறையே ரூபா 44,685,417 மற்றும் ரூபா 9,383,451 ஆக இருந்த போதும் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் முறையே ரூபா 40,639,179 மற்றும் ரூபா 8,425,958 ஆகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் ரூபா 3,088,745 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(v) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் வேலைக்குச் சமூகமளித்தல் மிகையூதியத்திற்கு ஒதுக்கீடு செய்தல் மற்றும் பணமாகச் செலுத்திய மிகையூதியம் முறையே ரூபா 3,277,158 மற்றும் ரூபா 3,106,081 ஆக இருந்த போதிலும் அது காசுப் பாய்ச்சல் கூற்றில் முறையே ரூபா 2,372,806 மற்றும் ரூபா 2,979,183 ஆகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் ரூபா 435,300 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(vi) மீளாய்வாண்டிற்கான ரூபா 32,290,549 தொகையான பெறுமானத் தேய்வு மற்றும் காலக்கழிவுச் செலவு காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 32,732,929 ஆகச் செம்மையாக்கியதன் காரணமாக செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் ரூபா 442,380 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(vii) மீளாய்வாண்டின் போது முதிர்ச்சியடையாத உயிர்வாழ் சொத்துக்களிலிருந்து முதிர்ச்சியடைந்த உயிர்வாழ் சொத்துக்களுக்கு மாற்றம் செய்யப்பட்டிருந்த ரூபா 18,218,710 தொகையான நிதியற்ற செலவுகள் முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப் பாய்ச்சலில் வெளிக்கள அபிவிருத்திச் செலவின் கீழ் காசு வெளிப்பாய்ச்சலாகக் காட்டப்பட்டிருந்தது.

(viii) மீளாய்வாண்டிற்காக நிலையான சொத்துக்களைக் கொள்வனவு செய்தல் மற்றும் நடைமுறை வேலைக்காக செய்யப்பட்ட செலவுகள் ரூபா 2,125,980 ஆக இருந்த போதிலும் காசுப் பாய்ச்சல் கூற்றைத் தயாரிக்கும் போது அது ரூபா 20,805,107 ஆகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சல் ரூபா 18,679,127 ஆல் குறைத்துக்காட்டப்பட்டிருந்தது.

(ix) இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்திடமிருந்து மீளாய்வாண்டின் போது கிடைக்கப்பெற்ற ரூபா 2,127,249 உதவுதொகைப் பெறுமதி காசுப்பாய்ச்சல் கூற்றில் ரூபா 2,400,224 ஆகக் காட்டப்பட்டிருந்ததன் காரணமாக முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசு உட்பாய்ச்சல் ரூபா 272,975 ஆல் அதிகரித்துக்காட்டப்பட்டிருந்தது.

(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 16

(i) ரூபா 17,925,625 கிரயமான முதிர்ச்சியடைந்த பயிர்களுக்கான (Mature Plantation Vested) 2011 ஆம் ஆண்டிலிருந்து உரிய பெறுமதியினை மிகைத்து காலக்கழிவு செய்ததன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 594,554 மொத்த தொகையான காலக்கழிவு அதிரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ii) நியமத்தின் 55 ஆம் பந்தியின் பிரகாரம் ஒரு சொத்துக்கு பெறுமானத்தேய்வு செய்தலானது அச் சொத்தைப் பயன்படுத்துவதற்காக ஆயத்தமான நிலைக்கு கொண்டு வந்ததன் பின்னர் ஆரம்பிக்கப்பட வேண்டிய போதிலும் சபை ஸ்தாபிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் காணப்பட்ட ரூபா 8,699,304 கிரயமுள்ள ஏனைய சொத்துக்கள் (Other Vested Assets) தொடர்பாக 2011 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை பெறுமானத்தேய்விற்கு ஏற்பாடு செய்யப்படாதிருந்ததுடன் மீள் மதிப்பீடும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(iii) இலக்கம் 320, டாலி வீதி எனும் விலாசத்தில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான களஞ்சியம் மற்றும் அலுவலகக் கட்டிடம் நிதிக் கூற்றுக்களில் ரூபா 129,630 ஆகக் காட்டப்பட்டிருந்த போதிலும் அவற்றை மீள் மதிப்பீடு செய்து நியாயமான பெறுமதியில் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 32

நியமத்தின் 15 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிச் சொத்துக்களின் நிதி நிலைமை விபரத்தினுள் தனியான தலைப்பு ஒன்றின் கீழ் காட்டப்பட வேண்டிய போதிலும் ரூபா 3,651,833 கூட்டு மொத்தமான நிதிச் சொத்துக்கள் பெற வேண்டிய கணக்குகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(உ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 39

நியமத்தின் 09 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிச் சொத்துக்கள் நியாயப் பெறுமதியில் செம்மையாக்கப்பட வேண்டிய போதிலும் சபையினால் உரிய செம்மையாக்கல் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஊ) இலங்கை கணக்கீட்டு நியமம் - 41

(i) வணிகப் பெறுமதியுடன் மரக்கன்றுகளின் பெறுமதியைப் பெற்றுக்கொள்வதற்காக ஆயுள் கணிப்பீட்டு மதிப்பீடு (Acturial Valuation) மேற்கொள்ளப்படாததன் காரணமாக பொதுப் பாவனை உயிர் வாழ் சொத்துக்களின் (Consumable Biological Asset) பெறுமதி கணக்குகளின் மூலம் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ii) ரூபா 21,041,223 பெறுமதியான முதிர்ச்சியடையாத மரப் பயிர்ச்செய்கைக்காக மேற்கொள்ளப்பட்ட கிரயத்தை முதிர்ச்சியடையாத பொதுப்பாவனை உயிர்வாழ் சொத்துக்களின் கீழ் அறிக்கையிடுவதற்குப் பதிலாக இடைப் பயிர் பயிர்ச்செய்கையின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தது.

2.2.3 கணக்கீட்டுக் கொள்கை

இடைப் பயிர் பயிர்செய்கைகளுக்காக முதிர்ச்சியடையாத பயிர்களிலிருந்து முதிர்ச்சியடைந்த பயிர்களுக்கு மாற்றப்படுகின்றன காலத்தை உறுதியாக கணக்கீட்டுக் கொள்கையின் மூலம் வெளிப்படுத்தப்படாததன் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அப்பயிர்கள் தொடர்பாக மூலதனமாக்கப்பட்ட ரூபா 19,881,889 தொகையான செலவுகள் முதிர்ச்சியடைந்த பயிர்களின் கீழ் அறிக்கையிட முடியாதிருந்தது.

2.2.4 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை முதிர்ச்சியடைந்த பயிர்கள் தொடர்பாக ரூபா 82,143,685 தொகையான பெறுமானத் தேய்வு குறைத்தும் மீளாய்வாண்டின் போது ரூபா 4,119,729 தொகையான பெறுமானத் தேய்வு அதிகரித்தும் கணிப்பீடு செய்ததன் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட

வேண்டிய திரண்ட பெறுமானத் தேய்வின் பெறுமதி ரூபா 78,023,956 குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது முதிர்ச்சியடையாத பயிர்களுக்காக ரூபா 319,649 செலவு செய்யப்பட்டிருந்ததுடன் அக்கிரயத்தை முதிர்ச்சியடையாத பயிர்கள் தொடர்பாக மூலதன மாக்குவதற்குப் பதிலாக விபரமான வருமானக் கூற்றில் ஒரு செலவாகக் காட்டப்பட்டிருந்தது.

(இ) குறுங்காலப் பயிராகிய சோளம் மற்றும் வாழைப்பயிர்களுக்காக 2002 மற்றும் 2011 ஆம் ஆண்டுகளின் போது செலவு செய்யப்பட்ட ரூபா 225,955 தொகை முதிர்ச்சியடையாத பயிர்களின் கீழ் மூலதனமாக்கப்பட்டிருந்தும் அக்கிரயத்தை கணக்குகளின் மூலம் பதிவழிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டின் போது ஒன்று சேர்க்கப்பட்ட நடைமுறை வேலைகளின் பெறுமதி ரூபா 1,169,657 மற்றும் ஆண்டின் போது மூலதனமாக்கப்பட்ட பெறுமதி ரூபா 8,456,124 ஆக இருந்த போதிலும் அவை நிதிக் கூற்றுக்களில் முறையே ரூபா 28,504,581 ரூபா 21,974,671 ஆகக் காட்டப்பட்டிருந்தன.

(உ) சபையின் தோட்டங்களின் மூலம் காட்டுப் பயிர்களுக்காகவும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காகவும் மீளாய்வாண்டின் போது செலவு செய்யப்பட்ட ரூபா 2,339,481 தொகையான செலவுகள் உரிய கணக்குகளின் கீழ் தனித்தனியாக மூலதனமாக்குவதற்குப் பதிலாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) தேயிலை மற்றும் இறப்பர்களின் இறுதி இருப்பு பெறுமதியைக் கணிப்பீடு செய்யும் போது இருப்பு மெய்மையாய்வினை மேற்கொண்டு இறுதி இருப்பை கணிப்பீடு செய்வதற்குப் பதிலாக தேறிய புத்தகப் பெறுமதியான ரூபா 78,915,712 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. மேலும், அந்த மீதியைக் கணிப்பீடு செய்யும் போது 1999 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரை காணப்பட்ட ரூபா 3,568,335 மற்றும் ரூபா 1,014,417 தொகைகளான மறை மீதிகளை இனங்கண்டு தீர்த்துவைப்பதற்குப் பதிலாக இறுதி இருப்பு மீதிக்கு எதிரீடு செய்து காட்டப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் போது ரஹதுன்கொட தோட்டத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட ரூபா 234,859 தொகையான வாகன பழுதுபார்த்தல் செலவுகள் மரம் நடுவதற்காக மேற்கொள்ளப்பட்ட செலவாக மூலதனமாக்கப்பட்டிருந்தது.

(ஏ) சபையின் தோட்டங்களிலும் தலைமை அலுவலகத்திலும் மொத்த கிரயம் ரூபா 12,829,343 தொகையான இயந்திரங்கள் வாகனங்கள், உபகரணம், வீட்டு உபகரணம் என்பவற்றிற்கு மீளாய்வாண்டிற்காக ரூபா 2,567,521 தொகையான பெறுமானத்தேய்வு கணக்கீடு செய்யப்பட்டிருக்காததன் காரணமாக அச்சொத்துக்களின் தேறிய பெறுமதி அதிகரித்தும் செயற்பாட்டு நட்டம் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஐ) சபையின் தோட்டங்களிலும் தலைமை அலுவலகத்திலும் மொத்த கிரயம் ரூபா 13,756,219 தொகையான வீதிகள், பாலங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள் மற்றும் சொத்துக்களுக்காக முன்னைய ஆண்டு தொடர்பான பெறுமானத் தேய்வு ரூபா 963,119 தொகை மீளாய்வாண்டு தொடர்பாக செம்மையாக்கியதன் காரணமாக ஆண்டிற்கான நட்டம் அப்பெறுமதியால் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தும்.

(ஒ) சபையின் தோட்டங்களிலும் தலைமை அலுவலகத்திலும் மொத்த கிரயம் ரூபா 4,098,997 தொகையான கணணி மற்றும் உபகரணங்களுக்காக சபையினால் க்டைப்பிடிக்கப்பட்ட பெறுமானத் தேய்வு விகிதத்தை மிகைத்து பெறுமானத் தேய்வு கணிப்பீடு செய்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்காக ரூபா 636,873 தொகையான பெறுமானத் தேய்வு அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் செயற்பாட்டு நட்டம் அத்தொகையால் அதிகரித்தும் சொத்துக்களின் தேறிய பெறுமதி குறைத்தும் காட்டப்பட்டிருந்தன.

(ஓ) சபைக்குச் சொந்தமான கொழும்பில் அமைந்துள்ள 12 கட்டிடங்களை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் மீளாய்வாண்டிற்காக கிடைக்க வேண்டிய வருமானம் ரூபா 43,789,256 ஆக இருந்த போதிலும் அது ரூபா 10,041,700 ஆக கணக்கீடு செய்ததன் காரணமாக நிதிக்கூற்றுக்களில் மீளாய்வாண்டிற்கான வருமானமும் பெறவேண்டிய வருமானமும் ரூபா 33,747,556 தொகையால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஔ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான காணிக் குத்தகை வருமானம் ரூபா 44,541,880 ஆகக் காட்டப்பட்டிருந்தும் அவ்வருமானத்துடன் முன்னைய ஆண்டுகள் தொடர்பாகச் செலுத்தப்பட்ட ரூபா 15,854,592 கட்டிட வாடகை வருமானம் ரூபா 16,978,168 என்பன காணப்பட்டன. மேலும் மீளாய்வாண்டின் குத்தகை வருமானத்தை கணிப்பீடு செய்வதற்காக ஈடுபடுத்தப்பட்டிருந்த 20 காணிகளுக்கான ரூபா 459,372 தொகையான குத்தகை வாடகை வருமானம் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) சபையின் கணக்கீட்டு கொள்கையின் பிரகாரம் உபகரணங்களுக்கு வருடாந்தம் 12.5 சதவீதம் பொறுமானத்தேய்வு செய்யப்படவேண்டிய போதிலும் அச்சொத்துக்களுக்கு 5 சதவீதத்தின் கீழ் பெறுமானத்தேய்வு செய்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 61,438 ஆல் குறைத்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) அனைத்து முதிர்ச்சியடைந்த பயிர்களுக்காக 5 சதவீதத்தில் பெறுமானத் தேய்விற்கு ஏற்பாடு செய்யப்பட வேண்டிய போதிலும் ரூபா 8,203,624 தொகையான ஏனைய முதிர்ச்சியடைந்த பயிர்களுக்காக பெறுமானத் தேய்விற்கான ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) 1997 ஆம் ஆண்டிலும் அதற்கு பின்னைய ஆண்டுகளிலிருந்தும் நிறுவப்பட்ட வீதிகள், பாலங்கள், தொடர் அறைகள், கட்டிடங்கள் என்பவற்றிற்காக வருடாந்தம் 5 சதவீதம் பொறுமானத்தேய்வு செய்யப்படவேண்டிய போதிலும் பல ஆண்டுகளாக அனைத்து சொத்துக்களையும் உள்ளடக்கும் வகையில் பெறுமானத்தேய்வு கணிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அதற்கிணங்க ரூபா 40,017,533 கிரயமான அச் சொத்துக்களுக்காக 2015 திசெம்பர் 31 வரையுமான ரூபா 21,248,940 பெறுமானத்தேய்வு மற்றும் மீளாய்வாண்டிற்கான ரூபா 2,000,877 பெறுமானத்தேய்வு முழுமையாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஏ) 2012 ஆம் ஆண்டின் பின்னர் கொள்வனவு செய்யப்பட்ட இயந்திரங்களுக்காக 20 சதவீதத்தின் கீழும் இதற்கு முன்னைய ஆண்டுகளில் கொள்வனவு செய்த இயந்திரங்களுக்காக 33 1/3 சதவீதத்தின் கீழும் பெறுமானத்தேய்விற்காக ஏற்பாடு செய்தல் சபையின் பெறுமானத்தேய்வுக் கொள்கையாக இருந்த போதிலும் 04 தோட்டங்களால் இக் கணக்கீட்டுக் கொள்கை கடைப்பிடிக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் போது பெறுமானத்தேய்வு ரூபா 1,030,073 தொகையால் அதிகரித்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஐ) 2009 ஆம் ஆண்டின்போது ஆரம்பிக்கப்பட்ட செயற்திட்டங்களுக்காக செலவு செய்யப்பட்ட ரூபா 6,051,265 நிதிகூற்றுக்களில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூலதன வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 வரையும் அச் செயற்திட்டங்கள் வெற்றியளிக்காதிருந்த போதிலும் அச் செலவுகளைப் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) முதிர்ச்சி நிலைமையின் கீழ் கணக்கீடு செய்யப்படவேண்டிய ரூபா 177,961 பெறுமதியான நாற்று மேடைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவுகள் மீளாய்வாண்டின் வரை நடை பெற்றுக்கொண்டிருக்கும் வேலைகளின் கீழ் காட்டப்பட்டிருந்தது.

(கூ) 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூலதன வேலை மீதிக்குள் காட்டப்பட்டிருந்த ரூபா 3,339,466 தொகையான வருமானத் தன்மையான செலவுகளை செலவுகளாகப் பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(கெ) 2016 ஆம் ஆண்டிற்கான ரூபா 231,859 தொகையான நிலையான வைப்பு வட்டி வருமானம் கணக்குகளிலிருந்து தவிர்க்கப்பட்டிருந்தது.

2.2.5 விளக்கமளிக்கப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நடைபெற்றுக் கொண்டிருக்கும் மூலதன வேலைகளின் பேரேட்டு கணக்கு மீதி ரூபா 21,974,761 ஆக இருந்த போதிலும் துணைப் பதிவேடுகளின் பிரகாரம் அது ரூபா 21,218,114 ஆக இருந்தமையால் ரூபா 756,647 வித்தியாசம் அவதானிக்கப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதிர்ச்சியடையாத தேயிலை, இறப்பர் மற்றும் ஏனைய பயிர்களுக்கான நிதிக்கூற்றுக்களின் படியான பெறுமதிக்கும் துணைப் பதிவேடுகளின் படியான பெறுமதிக்குமிடையே முறையே ரூபா 75,508,295 மற்றும் ரூபா 88,120,005 வித்தியாசம் தோன்றியிருந்தது.

(இ) நிலையான வைப்புக்களுக்குரிய பேரேட்டுக் கணக்குகளின் படியான மீதி ரூபா 3,651,833 ஆக இருந்த அதேவேளை நிலையான வைப்பு பதிவேட்டின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 3,582,416 ஆக இருந்ததனால் ரூபா 69,417 வித்தியாசம் காணப்பட்டது.

(ஈ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் பணிக்கொடை ஒதுக்கீட்டு மீதி, செலுத்தவேண்டிய பணிக்கொடை, பணிக்கொடை மிகைக் கட்டணச் செலவு ஆகிய மீதிகளுக்கும் உரிய துணைப் பதிவேடுகளுக்குமிடையே ரூபா 34,993,072 வித்தியாசம் காணப்பட்டது.

(உ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் கணக்கு கூற்றுக்களின் பிரகாரம் எல்கடுவ தோட்டக் கம்பனியிடமிருந்து கிடைக்க வேண்டிய பெறுமதி ரூபா 670,350 ஆக இருந்தும் அக்கம்பனியின் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் அப்பெறுமதி ரூபா 1,185,670 ஆக இருந்தது.

2.2.6 கணக்காய்விற்கான சான்றுகள் இல்லாமை

பின்வரும் கணக்கு விடயங்களுக்கு எதிரே காட்டப்பட்டுள்ள சான்றுகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையின் காரணமாக அவ்விடயங்களைத் திருப்திகரமாகக் சான்றுறுதி செய்வதற்கோ அல்லது ஏற்றுக்கொள்வதற்கோ முடியாதிருந்தது.

| | விடயம் | பெறுமதி | சமர்ப்பிக்கப்படாத சான்று |
|---|---|---|---|
| | | ரூபா. | |
| (அ) | காணிகள், கட்டிடங்கள், வாகனங்கள் என்பன | 1,651,989,274 | (i) துணைப் பதிவேடு<br>(ii) நிலையான சொத்துக்கள் பதிவேடு<br>(iii) உருப்படி மெய்மையாய்வு அறிக்கை |
| (ஆ) | பாவனைப் பிரிவின் கடன்பட்டோர் பெறுவனவுகள் மற்றும் கலஹ தோட்டத்தின் கடன்பட்டோர் பெறுவனவுகள் | 28,986,415 | (i) துணைப் பதிவேடு<br>(ii) கடன்பட்டோர் காலப்பகுப்பாய்வு<br>(iii) மீதிகளின் உறுதிப்படுத்தல்கள் |
| (இ) | செலுத்தவேண்டிய வணிகக் கணக்குகள் | 2,532,160,239 | (i) துணைப் பதிவேடு<br>(ii) கடன் கொடுத்தோர் காலப்பகுப்பாய்வு |
| (ஈ) | நடைபெற்றிருக்கும் மூலதன வேலைகள் | 3,197,506 | செயற்திட்ட கோவைகள் |
| (உ) | நிலையான வைப்புக்கள் | 3,651,833 | நிலையான வைப்புச் சான்றிதழ்களும் வங்கி மீதி உறுதிப்படுத்தல்களும் |

2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக செயற்படாது காணப்பட்ட ரூபா 339,549,051 பெறுமதியான கடன்பட்டோர்களிடமிருந்து பெறவேண்டிய பணத்தை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்டுவருகின்ற தீர்த்து வைக்கப்படாத விழா முற்பணம் ரூபா 654,077 தொகையை உரிய ஊழியர்களிடமிருந்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) பல ஆண்டுகளாக தீர்த்துவைக்கப்படாத ரூபா 17,352,768 தொகையான அட்டுறு செலவுகளும் ரூபா 48,338,488 தொகையான மீளச் செலுத்தவேண்டிய வைப்புக்களும் காணப்பட்டதுடன் இப் பொறுப்புக்களை சரியாக இனங்கண்டு தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபையினால் பல ஆண்டுகளாக தோட்ட தொழிலாளர்களின் சம்பளங்களிலிருந்து கழித்த ரூபா 7,789,052 தொகையான தொழிற்சங்களுக்கான அங்கத்துவக் கட்டணங்களை உரிய சங்கங்களுக்கு அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) பெறவேண்டிய குத்தகை வாடகை வருமானத்தில் உறுதியாக இனங்காணப்படாத ரூபா 16,619,043 வரவு மீதியும் ரூபா 2,274,185 செலவு மீதியும் காணப்பட்டதுடன் அம்மீதிகளை இனங்கண்டு அறவீடு செய்வதற்கு அல்லது தீர்த்துவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1980 இன் 46 ஆம் இலக்க ஊழியர் நம்பிக்கை நிதிய அதிகாரச் சட்டம், 1983 இன் 12 ஆம் இலக்க மிகையூதியக் கொடுப்பனவு அதிகாரச் சட்டம், 1958 இன் 15 ஆம் இலக்க ஊழியர் சேமலாப நிதிய அதிகாரச் சட்டம் என்பன. | சபையின் நியதிச்சட்ட பொறுப்புக்களை முறைப்படியாக தீர்த்துவைக்கப்படாததன் காரணமாக 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஊழியர் சேமலாப நிதியத்திற்கு ரூபா 381,475,552 தொகையும் ஊழியர் நம்பிக்கை நிதியத்திற்கு ரூபா 32,367,337 தொகையும் தோட்ட தொழிலாளர்களின் சேமலாப நிதியத்திற்கு ரூபா 19,139,467 தொகையும் இலங்கை பெருந்தோட்ட ஊழியர்களின் சேமலாப நிதியத்திற்கு ரூபா 3,200,018 தொகையும் செலுத்த வேண்டிய மிகையூதியம் ரூபா 512,688,406 தொகையும், வழக்குத் தீர்ப்பின் அடிப்படையில் செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியங்கள் ரூபா 502,339,067 தொகையும் உள்ளடக்கிய ரூபா 1,451,209,847 மொத்த தொகையான நியதிச்சட்ட பொறுப்புக்கள் காணப்பட்டன. |
| (ஆ) 2015 மே 25 ஆந் திகதிய பீஈடி 1/2015 ஆம் இலக்க அரசாங்க முயற்சிகள் சுற்றறிக்கை | உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரிமையற்ற உத்தியோகத்தர்களுக்கு மாதாந்தம் ரூபா 30,000 வீதம் போக்குவரத்து மற்றும் எரிபொருள் படி செலுத்தப்பட்டிருந்ததுடன் இதற்காக சபையினால் மீளாய்வாண்டின் போது ரூபா 1,791,120 செலவு செய்யப்பட்டிருந்தது. |
| (இ) 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரசாங்க நிதி சுற்றறிக்கை | முற்பணங்களானது உரிய செய்ற்பாடு பூர்த்தி செய்யப்பட்டு 10 நாட்களுக்குள் முற்பணங்கள் தீர்த்துவைக்கப்பட வேண்டிய போதிலும் ரூபா 20,911,975 தொகையான முற்பணங்கள் ஒரு வருடத்தை மிகைத்துக் காணப்பட்டன. |

| | | |
|---|---|---|
| (ஈ) | 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவைக் கட்டண அதிகாரச்சட்டம் | ஒவ்வொரு காலாண்டு முடிவடைந்து அடுத்துவரும் மாதத்தின் 20 ஆந் திகதிக்கு முன்னர் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு பொருளாதார சேவைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய போதிலும் பல ஆண்டுகளாக அவ்வாறு கொடுப்பனவு செய்யப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு செலுத்த வேண்டிய கட்டணம் ரூபா 7,819,534 ஆகும். |
| (உ) | 2009 இன் 09 ஆம் இலக்க தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி அதிகாரச் சட்டம் | வெளித்தரப்பினர்களிடமிருந்து அறவிடப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்புதல் வரி ரூபா 8,549,879 தொகை 2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு அனுப்பிவைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது சபையில் வைத்திருக்கப்பட்டது. |
| (ஊ) | 1995 யூலை 21 ஆந் திகதிய அரசாங்க காணிகளை ஒப்படைத்தல் தொடர்பாக வழங்கப்பட்ட வழிகாட்டிக் கோவை | வழிகாட்டிக் கோவை இலக்கம் 08 இன் பிரகாரம் அரசாங்க காணிகளை குத்தகைக்கு வழங்கும் போது அரசாங்க பிரதம மதிப்பீட்டாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மதிப்பீட்டு அறிக்கையின் அடிப்படையில் குத்தகைப் பணம் அறவிடப்பட வேண்டிய போதிலும், அதற்கு முரணாக தனியார் நிறுவனம் ஒன்றிற்கு புரிந்துணர்வு உடன்படிக்கையின் மூலம் 25 ஆண்டுகள் காலத்திற்கு 4825 சதுர அடியும் மற்றுமொரு நிறுவனத்திற்கு 5322 சதுர அடியும் 2003 ஏப்ரல் 01 ஆந் திகதியிலிருந்து 30 ஆண்டுகள் காலத்திற்காக குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. |

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான சபையின் செயற்பாட்டு விளைவுகள் ரூபா 563,961,014 பற்றாக்குறையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 443,532,303 ஆக இருந்ததனால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 120,428,711 பின்னடைவாகும். மீளாய்வாண்டில் பூர்த்தியான தேயிலை உற்பத்தி வீழ்ச்சியடைதல் காரணமாக மொத்த இலாபம் ரூபா 28,228,298 ஆல் குறைவடைதல், கட்டிடங்கள் மற்றும் குத்தகை வாடகை வருமானம் ரூபா 95,819,181 ஆல் குறைவடைதல், ஏனைய வருமானம் ரூபா 48,226,325 ஆல் வீழ்ச்சியடைதல் என்பன மேற்கூறிய நிதி விளைவுகளின் பின்னடைவிற்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தன.

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய 04 ஆண்டுகளின் நிதி விளைவுகளைப் பகுப்பாய்வு செய்த போது 2012 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை நட்டம் அடையப்பெற்றிருந்தது. 2013 ஆம் ஆண்டில் ரூபா 676,285,352 தொகையான உயர்வான நட்டம் சுட்டிக்காட்டப்பட்டிருந்ததுடன் 2014 ஆம் ஆண்டின் போது அது ரூபா 413,342,669 வரை குறைவடைந்திருந்தது. மீண்டும் 2015 ஆம் ஆண்டிலிருந்து நட்டம் படிப்படியாக அதிகரித்திருந்தது. எவ்வாறாயினும் நிதி விளைவுகளுக்கு பதவியணியினர் ஊதியம், அரசாங்கத்திற்குச் செலுத்திய வரி, பெறுமானத் தேய்வு என்பவற்றை மீண்டும் செம்மையாக்கும் போது 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 177,128,495 தொகையான மறைப் பங்களிப்பு உருவாகியிருந்தும் 2013 ஆம் ஆண்டிலிருந்து 2015 ஆம் ஆண்டு வரை சாதகமான பங்களிப்புடன் ரூபா 666,532,742 வரை முன்னேற்றமடைந்திருந்தது. எனினும் மீளாய்வாண்டின் போது அப்பங்களிப்பு மீண்டும் ரூபா 265,931,450 வரை குறைவடைந்திருந்தது.

3.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) தரகர்களுக்குச் செலுத்திய வட்டி வருமானம் முன்னைய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 46 சதவீதத்தால் குறைவடைந்ததன் காரணமாக மீளாய்வாண்டில் நிதிச் செலவுகள் 21 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ஆ) சபையின் பிரதான உற்பத்திப் பொருட்களின் இலாபத் தன்மை மீளாய்வாண்டு மற்றும் முன்னைய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றது.

| உற்பத்தி | மொத்தப் பங்களிப்பு | | |
|---|---|---|---|
| | 2016 | 2015 | 2014 |
| | ரூபா. | ரூபா. | ரூபா. |
| தேயிலை | (374,060,186) | (416,531,996) | (309,250,507) |
| இறப்பர் | (23,958,649) | (18,419,436) | (19,453,637) |
| தெங்கு | (4,958,669) | (4,467,633) | (3,315,237) |
| இடைப் பயிர்கள் | 910,931 | 9,483,167 | 6,332,600 |
| ஜன ரீ | 3,200,522 | 2,841,547 | 2,401,614 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மீளாய்வாண்டில் பூர்த்தியான தேயிலை மற்றும் பச்சைத் தேயிலை மொத்த விற்பனையின் நட்டம் 2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 21 சதவீதத்தால் அதிகரித்துக் காணப்பட்டதுடன் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 10 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ii) மீளாய்வாண்டிற்கான இறப்பர் பால் உற்பத்தி முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 84,267 கிலோகிராம்களால் அதிகரித்திருந்தும் உற்பத்திக் கிரயம் 14 சதவீதத்தால் அதிகரித்திருந்ததனால் 2015 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் நட்டம் 30 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(iii) மீளாய்வாண்டில் சந்தைப்படுத்தப்பட்ட தேங்காய்களின் அளவு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 26,769 தேங்காய்களால் அதிகரித்திருந்ததுடன் வருமானம் 57 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. உற்பத்திக் கிரயம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 17 சதவீதத்தால் அதிகரித்திருந்ததன் காரணமாக தேங்காய் உற்பத்தியின் பங்களிப்பு மேலும் வீழ்ச்சியடைந்திருந்தது.

(iv) குமாரவத்த தோட்டத்தின் கரும்பு பயிர்ச்செய்கை செயற்திட்டத்தின் மூலம் முன்னைய ஆண்டில் கிடைத்த ரூபா 5,179,517 வருமானம் மீளாய்வாண்டிற்கான இடைப்பயிர் பயிர்ச்செய்கையின் அடிப்படையிலான பங்களிப்பு குறைவடைந்தமைக்கு பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

(இ) மீளாய்வாண்டிற்கான கம்பனியின் முக்கிய விகிதங்களில் சில முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றன.

| விபரம் | 2016 | 2015 | 2014 |
|---|---|---|---|
| மொத்த இலாப விகிதம் | -80% | -73% | -49% |
| தேறிய இலாப விகிதம் | -114% | -76% | -26% |
| நடைமுறை விகிதம் | 1:3.7 | 1:3.8 | 1:4.3 |
| விரைவுச் சொத்து விகிதம் | 1:4.2 | 1:4.2 | 1:4. |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் கம்பனியின் மொத்த இலாப விகிதம் மற்றும் தேறிய இலாப விகிதம் மறைப் பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் அது முறையே 35 சதவீதத்திலிருந்து 65 சதவீதம் மற்றும் 76 சதவீதத்திலிருந்து 114 சதவீதம் வரையும் மேலும் வீழ்ச்சியடைந்திருந்தது. மேலும் சபையின் திரவத்தன்மை விகிதம் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டதன் காரணமாக தொழிற்படு மூலதனச் சிக்கல் உருவாகும் ஆபத்தும் காணப்படுகின்றது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விவசாய நடவடிக்கைகளிற்கு தேவையான இயந்திரங்களும் உபகரணங்களும் மற்றும் தொழிற்சாலைகளைத் தாபித்தல், பராமரித்தல், பேணுதல் என்பன சபையின் பிரதான குறிக்கோள்களாகும். அவ்வாறு செயற்படாத நிலையில் காணப்பட்ட 06 தொழிற்சாலைகள் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 05 தோட்டங்களில் அமைந்துள்ள தேயிலைத் தொழிற்சாலைகள் மீளாய்வாண்டின் இறுதி வரை செயற்பாடற்ற நிலையில் காணப்பட்டதுடன் உரிய தொழிற்சாலைக்குள் காணப்பட்ட ரூபா 7,639,107 புத்தகப் பெறுமதியான இயந்திரங்களும் உக்கிப் போகும் நிலையில் காணப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் போது 17 தோட்டங்களின் பூர்த்தியான ஒரு கிலோ தேயிலையின் பங்களிப்பை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மறைப் பெறுமதியைக் கொண்டிருந்ததுடன் ரூபா 179 இலிருந்து ரூபா 533 வரையான வீச்சில் காணப்பட்டது. அதற்கிணங்க சபையினால் ஒரு கிலோ தேயிலையை உற்பத்தி செய்வதற்கு மேற்கொள்ள வேண்டியிருந்த ஆரம்பக் கிரயத்தை

விற்பனை வருமானத்தின் மூலம் ஈடுசெய்ய முடியாததினால் மறைப் பங்களிப்பு உருவாகியிருந்தது.

(இ) தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் நியமத்தின் பிரகாரம் மத்திய மலைநாட்டுத் தேயிலை ஒரு ஹெக்டயருக்கான சராசரி விளைச்சல் 1200 கிலோகிராம் அளவாகும். மீளாய்வாண்டில் சபையில் ஒரு ஹெக்டயருக்கான பூர்த்தியான தேயிலை விளைச்சல் 221 கிலோ கிராமிற்கும் 508 கிலோகிராமிற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டதுடன் அது தேயிலை ஆராய்ச்சி நிறுவனத்தின் நியமத்தின் படியான சராசரி விளைச்சலாகிய 1200 கிலோ கிராமுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைந்த பெறுமதியினைக் கொண்டிருந்தது. அவ்வாறே சபைக்குச் சொந்தமான கிரேட்வெலி தோட்டத்தைத் தவிர்த்து ஏனைய தோட்டங்களில் ஒரு ஹெக்டேயருக்கான பூர்த்தியான தேயிலை உற்பத்தியை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் குறைவடைந்திருந்தது.

4.2 செயற்பாட்டு நடவடிக்கைகள்

(அ) சபையினால் குத்தகைக்கு வழங்கியுள்ள ஆதனங்கள் சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒரு தனியார் கம்பனிக்கு குத்தகைக்கு வழங்கியிருந்த ஆதனங்களுக்காக அக்கம்பனியால் குத்தகை உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகை செலுத்தப்படாததன் காரணமாக சபையினால் அக் கம்பனிக்கு எதிராக எஸ்/71049/2010 ஆம் இலக்க வழக்கு தொடுக்கப்பட்டிருந்ததுடன் 2011 பெப்ரவரி 02 ஆந் திகதி நீதிமன்ற கட்டளையின் பிரகாரம் குத்தகைக்காரரை உரிய ஆதனங்களிலிருந்து வெளியேற்றுவதற்கு தீர்ப்பு வழங்கப்பட்டிருந்தது. குத்தகைக்காரரால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஆர்ஏ 39/2011 ஆம் இலக்க மேன்முறையீட்டு விண்ணப்பமும் தள்ளுபடியாக்கப்பட்டதன் காரணமாக உரிய சுற்றுப்புறத்தை 2014 ஒக்தோபர் 02 ஆந் திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் ஜனவவசம உத்தியோகத்தர்களுக்கு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பொது முகாமையாளரினால் (பதில்)னால் குத்தகைக்காரருக்குத் தெரியப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், குத்தகைக்காரரினால் உரிய ஆதனம் இந்த அறிக்கைத் திகதி வரை சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருக்காததுடன் அது சம்பந்தமாக முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(ii) சபையினால் ஒரு தனியார் கம்பனிக்கு 23.989 சதுர அடியானது 2013 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரை இரண்டு ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் உரிய குத்தகை காலம் முடிவடைந்திருந்த போதிலும், புதிய குத்தகைக்கு உடன்படிக்கையில் கைச்சாத்திடாது அல்லது குத்தகைப் பணத்தை செலுத்தாது மீளாய்வாண்டின் இறுதி வரை குத்தகைக்காரர் கட்டிடத்தை பயன்படுத்திவந்தார்.

(iii) 2012 ஆகஸ்ட் 04 ஆந் திகதியிலிருந்து 04 ஆண்டு காலத்திற்காக ஒரு சதுர அடி ரூபா 60 ஆக 11500 சதுர அடியான ஒரு கட்டிடம் இலங்கை உயர் தொழில்நுட்ப கல்வி நிறுவகத்திற்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2016 ஆகஸ்ட் 03 ஆந் திகதி உரிய குத்தகை காலம் முடிவடைந்திருந்தது. சபையின் பொது முகாமையாளரால் புதிய குத்தகை வாடகையாக மாதாந்தம் ரூபா 1,437,500 ஆக அறவிடுமாறு தொழில்நுட்ப நிறுவனத்திற்கு 2016 செப்தெம்பர் 03 ஆந் திகதி ஒரு கடிதத்தின் மூலம் தெரியப்படுத்தியிருந்த போதிலும் தொழில்நுட்ப நிறுவனம் அதற்காக இணக்கத்தை வெளிப்படுத்தாதிருந்ததுடன் பழைய குத்தகைப் பணமே செலுத்தப்பட்டு வந்தது. அதற்கிணங்க குத்தகை காலம் முடிவடைந்திருந்ததும் முறைப்படியாக மதிப்பீட்டினை மேற்கொண்டு மற்றுமொரு குத்தகைதாரருக்கு அக்கட்டிடத்தை குத்தகைக்கு வழங்குவதற்கு முகாமைத்துவம் கவனம் செலுத்தியிருக்கவில்லை.

(iv) 25 ஆண்டுகள் காலத்திற்காக 320 ஆம் இலக்கம் டாலி வீதியில் அமைந்துள்ள 14500 சதுர அடியான ஒரு கட்டிடம் 2003 ஆம் ஆண்டிலிருந்து ஒரு தனியார் கம்பனிக்கு ஒரு சதுர அடி ரூபா 13.50 ஆக குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்ததுடன் 2005 ஒக்டோபர் 25 ஆந் திகதியிலிருந்து அமுலாகும் வகையில் குத்தகை உடன்படிக்கை கைச்சாத்திடப்படடிருந்தது. அந்த உடன்படிக்கையின் 3(ஏ) பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு 05 ஆண்டுகளுக்கு ஒரு தடவை அரசாங்க மதிப்பீட்டாளரின் பிரகாரம் மாதாந்தம் குத்தகைப் பணம் இறவிடப்பட வேண்டிய போதிலும் சபையினால் உரிய குத்தகைப் பணம் அரசாங்க மதிப்பீட்டாளரின் பிரகாரம் அறவிடப்படாதிருந்ததுடன் குத்தகைதாரரால் பழைய குத்தகைப் பணமே மீளாய்வாண்டின் இறுதி வரை செலுத்தப்பட்டு வந்தது.

(v) இறப்பர் அபிவிருத்தி திணைக்களம் பெருந்தோட்ட கைத்தொழில் கண்காணிப்பு பிரிவு துருசுவிய நிதியம் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு ஆகிய நிறுவனங்களுக்கு குத்தகை அடிப்படையில்

வழங்கப்பட்ட ஜனவசம் தலைமை அலுவலகத்தின் கட்டிடத்திற்காக அறவிட வேண்டியிருந்த நிலுவையான குத்தகைப் பணம் ரூபா 14,248,699 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரை உரிய குத்தகைப் பணத்தை அறவீடு செய்வதற்கு சபைக்கு முடியாதிருந்தது. அந்த நிறுவனங்களை வெளியேறிச் சென்றதன் பின்னர் இக்கட்டிடங்களை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததன் காரணமாக 2015 ஆம் ஆண்டிலிருந்து அக்கட்டிடம் விளைவற்றுக் காணப்பட்டதுடன் அந்நிறுவனங்களிடமிருந்து இறுதியாக அறவிட்ட விலையின் பிரகாரம் 33567 சதுர அடிகளை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் ஒரு ஆண்டிற்குப் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த ரூபா 22,515,000 இற்கு அண்மித்த வருமானம் சபையினால் இழக்கப்பட்டிருந்தது.

(vi) எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனிக்கு குத்தகை அடிப்டையில் வழங்கப்பட்டிருந்த இலக்கம் 520 டார்லி வீதியில் அமைந்துள்ள கட்டிடத்தின் முதலாம் மாடியில் 2572 சதுர அடிக்காக 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை ஒரு சதுர அடி ரூபா 60 ஆக குத்தகையினை அறவீடு செய்வதற்காக சபையினால் பட்டியல் வழங்கப்பட்டிருந்தும் மீளாய்வாண்டின் இறுதி வரை எதுவித குத்தகைப் பணமும் செலுத்தப்பட்டிருக்காததுடன் இரண்டு தரப்பினர்களாலும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இறப்பர் அபிவிருத்தி திணைக்களத்தின் ஆண்டறிக்கையிலுள்ள தரவுகளின் பிரகாரம் ஒரு ஹெக்டயருக்கு 550 இறப்பர் நாற்றுக்கள் காணப்பட வேண்டிய போதிலும் குமாரவத்த தோட்டத்தில் அப் பெறுமதி 200 இற்கும் 500 இற்கும் இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

(இ) சபையினால் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட துணைப் பதிவேடுகளின் பிரகாரம் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த காணிகளின் அளவு 2688 ஏக்கர்களாக இருந்ததுடன் அவற்றில் 313.9 ஏக்கர்களுக்குரிய குத்தகை வருமானம் மாத்திரம் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்ததுடன் மிகுதியான காணிகளுக்குரிய குத்தகை வருமானத்தைக் கணித்து அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

4.3 சச்சரவுத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

(அ) தற்போதைய அரசாங்கத்தின் பெருந்தோட்டக் கம்பனியாகிய எல்கடுவ தோட்டக் கம்பனிக்கு 2016 ஒக்தோபர் வரை ரூபா 7,328,456 பணம் ஒரு தனியார் கம்பனியால் தேயிலைக் கொழுந்துகளை வழங்குவதற்காக மீளாய்வாண்டின் ஒக்தோபர் 27 ஆந் திகதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்தது. பணிப்பாளர்கள் சபையின் அங்கத்தவர் ஒருவர் எல்கடுவ பெருந்தோட்டக் கம்பனியின் தலைவராக இருந்தும் அதற்காக பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் நவம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களில் சபையின் தேயிலைக் கொழுந்துகளை வழங்குவதற்காக அத்தனியார் கம்பனியால் செலுத்த வேண்டிய ரூபா 5,865,670 பணம் 2017 ஆம் ஆண்டின் இறுதி வரை அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 ஆம் ஆண்டில் செயற்பட்டு வந்த ஹந்தான தேயிலைத் தொழிற்சாலை 2016 ஆம் ஆண்டில் மண்சரிவு ஆபத்துக் காணப்பட்டதன் காரணமாக வேலைகள் நிறுத்தப்பட்டிருந்தன. அதனை உறுதிப்படுத்துவதற்காக தேசிய கட்டிடங்கள் ஆராய்ச்சி நிறுவனத்தின் சிபாரிசு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்காததுடன் அத்தொழிற்சாலை தனியார் தரப்பினருக்கு குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது.

4.4 ஆளணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக் கோவையின் 13 ஆம் பந்தியின் பிரகாரம் நிரந்தரப் பதவியில் காணப்படும் வெற்றிடங்களுக்காகவே பதில் கடமை நியமனம் வழங்கப்பட வேண்டியதுடன் நியமன அதிகாரியால் நியமிக்கப்பட்டிருந்தால் மேலதிக ஊதியங்கள் செலுத்தப்படலாகாது. எனினும் 2015 நவம்பர் 23 ஆந் திகதியிலிருந்து உதவி தோட்ட அத்தியட்சகர் ஒருவர் சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியல்லாத ஒரு பதவியான முகாமையாளர் (வன வளங்கள்) பதவியில் பதிற் கடமைக்காக நியமிக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக உரிய உத்தியோகத்தருக்கு இரண்டு மேலதிக ஊழியர் படிகளைச் செலுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 500,153 செலவு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) 2013 நவம்பர் 13 ஆந் திகதிய டீஎம்எஸ்/1696 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் கடிதத்தின் பிரகாரம் ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்ட சபையின் முகாமையாளர் (சட்டம்) MM 1-1 சம்பள அளவுத்திட்டத்திற்குப் பொருத்தமான படிநிலையில் அமர்த்தப்பட வேண்டும் என தெரியப்படுத்தப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டில் சேர்த்துக்கொள்ளப்பட்ட இரண்டு சட்ட உத்தியோகத்தர்களுக்கு அதற்கு முரணாக ரூபா 100,000 மாதாந்தப் படியும் அதற்கு மேலதிமாக போக்குவரத்து மற்றும் எரிபொருள் படியாக ரூபா 30,000 தொகையும் செலுத்துவதற்காக மீளாய்வாண்டின் போது ரூபா 1,350,000 செலவு செய்யப்பட்டிருந்தது.

## 5. கணக்களிதன்மையும் நல்லாட்சியும்

### 5.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2003 யூன் 03 ஆந் திகதிய பீஈ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் வருடாந்த கணக்குள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கூட்டுத்தாபனத்தினால் 2016 ஆம் ஆண்டிற்கான கணக்குகள் 2017 நவம்பர் 22 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுபாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட அவதானம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) கணக்கீடு | (i) கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க கணக்குகள் தயாரிக்கப்படாத சந்தர்ப்பங்கள் காணப்படுதல். |
| | (ii) கொடுக்கல் வாங்கல்களை முறையாக இனங்கண்டு சரியாக பேரேட்டுக் கணக்குகளில் உள்ளடக்காமை. |

(iii) கணக்காய்வு அறிக்கைகளின் மூலம் சுட்டிக்காட்டப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகளை சரிசெய்வதற்கு கவனம் செலுத்தப்படாமை.

(ஆ) குத்தகை ஆதனக் கட்டுப்பாடு

ஆதனங்களை குத்தகைக்கு வழங்குதல் மற்றும் வருமானங்களை அறவிடுதலில் சிக்கல்கள் காணப்படுதல் மற்றும் குத்தகை ஆதனங்களைப் பாதுகாப்பதில் குறைபாடுகள் காணப்படுதல். ஆதனங்களை குத்தகைக்கு வழங்குவதன் மூலம் பெற்றுக் கொள்ளப்பட்ட மற்றும் பெறவேண்டிய குத்தகைப் பணத்தின் அளவை உறுதியாக இனங்காணக்கூடிய வகையில் பதிவேடுகள் பேணப்படாமை.

(இ) செயற்பாட்டுக் கட்டுப்பாடு

உற்பத்தியை அதிகரிப்பதற்கு மற்றும் உற்பத்திக் கிரயத்தை குறைப்பது தொடர்பாக கவனம் செலுத்தப்படாமை.

(ஈ) பதிவேடுகளைப் பேணுதல்

பணிக்கொடைக் கொடுப்பனவு பதிவேடு முறைப்படி நாளதுவரையாக்கப்படாததன் காரணமாக செலுத்தி முடிவுறுத்தப்பட்ட பணிக் கொடையை பதிவேட்டிலிருந்து நீக்காமை மற்றும் ஒரு ஊழியருக்கு ஒரு ஊழியர் இலக்கத்தினை விட அதிக அளவிலானவை வழங்கியிருந்த சந்தர்ப்பங்கள் காணப்பட்டன.

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினி விஜேயசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள்

2016 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டுக்கானது

1. நிறுவனத் தகவல்கள்

1.1 அறிக்கையிடும் நிறுவனம்

மக்கள் தோட்ட அபிவிருத்தி சபையானது 1972 இன் 11ஆம் இலக்க அரச கமத்தொழில் கூட்டுத்தாபன சட்டத்தின் கீழ் 1976 பெப்ருவரி 6 ஆம் திகதியிடபட்ட 199/1எம் ஆம் இலக்கமிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மூலம் நிறுவப்பட்டது. பதிவு செய்யப்பட்ட அலுவலகமானது 55/75, வொக்ஷோல் ஒழுங்கை, கொழும்பு 02 என்ற முகவரியில் அமைந்துள்ளது.

1.2 முதன்மை நடவடிக்கையும் தொழிற்பாடுகளின் தன்மையும்

மீளாய்வுக்குட்படும் நிதியியல் ஆண்டின் போது சபையின் முதன்மை நடவடிக்கைளின் தன்மையில் ஏதேனும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் காணப்படவில்லை. சபையின் முதன்மை நடவடிக்கைகள் தேயிலை மற்றும் இறப்பர் பயிரிடுதல், தயாரித்தல், விற்பனை செய்தல் என்பனவாகும். மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபையானது தரகர்கள் மூலமான தேயிலை விற்பனைக்கு மேலதிகமாக (பெறுமதி சேர்க்கப்பட்ட உற்பத்தி) உள்நாட்டு தேயிலை விற்பனை நிலையத்தினை (ஜனதா தேயிலை/ மக்கள் சேவை)நிலையத்தை நடாத்துகின்றது.

2. தயாரித்தல் அடிப்படை

2.1 இணங்குவித்தல் கூற்று

சபையின் நிதியியல் கூற்றுகள், இலாப நட்டக் கூற்று.ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக்கூற்று.நிதிநிலைக்கூற்று, பங்கு மூலதனங்களில் மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் கூற்று அத்துடன் நிதியியல் கூற்றுகளுக்கான குறிப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

இந்நிதியியல் கூற்றுகள், இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.நி.அ.நி மற்றும் இ.க.நி) அத்துடன் 1995 இன் 19 ஆம் இலக்க இலங்கை கணக்கீடு தரநியம சட்டத்தினாலும் வழங்கப்பட்ட இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

2017.05.16 அன்று பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கமைவாக இந்நிதியியல் கூற்றுகளை வெளியிடப்படுவதற்கு பணிப்பாளர் சபையினால் அங்கீகாரமளிக்கப்பட்டது.

2.2 அளவீட்டு அடிப்படை

நிதியியல் கூற்றுகள் வரலாற்று செலவு நடைமுறை அடிப்படைக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து வரும் குறிப்புகளில் பொருத்தமான.திட்டவட்டமான கொள்கைகள் விளக்கப்பட்டுள்ளன. நிதியியல் கூற்றுகளில் பணவீக்க காரணிகளுக்காக சரிப்படுத்தல் எதுவும் மேற்கொள்ளப்பட்டிருக்கவிலை என்பதுடன் இந் நிதியியல் கூற்றுகள் இலங்கை ரூபாய்களில் தயாரிக்கப்பட்டுள்ளன.

2.3 மதிப்பீடுகளையும் தீர்வுகளையும் பயன்படுத்தல்

இலங்கை கணக்கீட்டு நியமங்கள் (இ.நி.அ.நி மற்றும் இ.க.நி) அமைவாக நிதியியல் கூற்றுகளை தயாரித்தலானது சொத்துகள், பொறுப்புகள், வருமானம் மற்றும் செலவுகளின் அறிக்கையிடப்பட்ட தொகைகளை பாதிக்கின்ற தீர்வுகள் மதிப்பீடுகள் மற்றும் ஊகங்களை போன்றவற்றை மேற்கொள்வதற்குமுகாமைத்துவத்தினை தேவைப்படுத்துகின்றது. உண்மையான பெறுபேறுகள் இம் மதிப்பீடுகளில் இருந்து வேறுபடலாம்.

மதிப்பீடுகளும் அதனோடு இணைந்த ஊகங்களும் வரலாற்று ரீதியான அனுபவங்களையும் அதே போன்று சூழ்நிலைகளின் கீழ் நியாயமானதாக நம்பப்படுகின்ற பல்வேறு வேறு காரணிகளையும் அடிப்படையாக கொண்டவை. அதன் பெறுபேறுகள் சொத்துகள் கொண்டுள்ள பெறுமதி மற்றும் வேறு மூலங்களில் இருந்து உடனடியாக புலப்படாத பொறுப்புகள் என்பன பற்றிய தீர்மானங்களை செய்வதில் இருந்தானவையாகும்.

மதிப்பீடுகளும் துணையளிக்கும் ஊகங்களும் முன்னெடுக்கப்படுகின்ற அடிப்படையொன்றில் மீளாய்வு செய்யப்படுகின்றன. கணக்கீட்டு மதிப்பீடுகளுக்கான திருத்தங்கள், நிதியியல் ஆண்டை மாத்திரம் பாதிக்குமாயின் மதிப்பீடு திருத்தப்பட்ட காலப்பகுதியிலும்,திருத்தங்கள், நடப்பு மற்றும் எதிர்காலஇரண்டையும் பாதிக்குமாயின்திருத்த காலப்பகுதியிலும்இனங்காணப்படுகின்றது.

2.4. தொடர்ந்து இயங்கும் எண்ணக்கரு

நிறுவனத்தின் தொடர்ந்து எண்ணக்கருவிற்காக அரசாங்க தனியார் மற்றும் ஊழியர் பங்குடமையின் கீழ் சபையானது மீள் கட்டமைக்கப்பட வேண்டுமென்ற மதிப்பீட்டினை பணிப்பாளர் சபை மேற்கொண்டுள்ளது. மீள்கட்டமைத்தல் நிகழ்ச்சித்திட்டமானதுபயன்படுத்தப்படாத மற்றும் குறைவாக பயன்படுத்தும் சொத்துகள் மற்றும் ஆதனங்களில் முதலிடும் நோக்கமொன்றுடன் தனியார் முதலீட்டாளர்களுடனான கூட்டுமுயற்சியுடன் தற்போது பிரயோகிக்கப்பட்டு வருகின்றது. புதிய முதலீடுகளிலிருந்து ஈட்டுவதற்கு எதிர்பார்க்கப்படும் வருமானத்திலிருந்து ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் உள்ளங்களாக நீண்ட கால நிலுவைகள் தீர்ப்பனவு செய்யப்படும். நிதித் தீர்ப்பனவுகள் தொடரந்தியங்கும் எண்ணக்கரு அடிப்படையில் தயாரிக்கப்பபட்டுள்ளதுடன் மீள்கட்டமைத்தல் நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைபடுத்தப்படும் வரை தீரத்துகாட்டவோ அல்லது ஏதேனும் வியாபார நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தவோ அவர்கள் உத்தேசிக்கவில்லை.

2.5 ஒப்பீட்டுத் தகவல்கள்

கணக்கீட்டு கொள்கைகள் முன்னைய ஆண்டில் பயன்படுத்தபட்டவைபோன்றே மாற்றமின்றி சபையினால் பின்பற்றப்பட்டு வருகின்றன. இத் தொகைகளும் வாசகங்களும் நடப்பாண்டில் எடுத்துரைப்பதற்கு அவசியப்படின் மீள் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளன.

2.6 ஐந்தொகைபின் திகதிக்கு பிந்திய நிகழ்வுகள்

அறிக்கையிடும் திகதிக்கு பிந்திய நிகழ்வுகள் என்பது அறிக்கையிடும் காலத்தின் இறுதிக்கும் நிதியியல் கூற்றுகள் வெளியிடப்படுவதற்கு அனுமதிக்கப்படும் போதான திகதிக்கும் இடையில் நிகழுகின்ற சாதகமான மற்றும் பாதகமான நிகழ்வுகளாகும். ஐந்தொகைக்கு பிந்திய முக்கிய நிகழ்வுகள் அனைத்தும் கருத்தில் கொள்ளப்பட்டு நிதியியல் கூற்றுகளில் பொருத்தமான சரிப்படுத்தல்கள் அல்லது நிதியியல் கூற்றுகளுக்கு வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

03. ஏனைய தகவல்கள்

3.1 மக்கள் தோட்ட அபிவிருத்தி சபை – கெலேபொக்க தோட்டம்

மேற்குறித்த தோட்டம் பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டுள்ளதுடன், 1999 ஆம் ஆண்டில் ரூபா 40 மில்லியன் நிதியியல் வசதிகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன. நிலுவையின் ஒரு பாகம் காலத்துக்கு காலம் தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளது. செலுத்த வேண்டிய வட்டிகள் வங்கியின் சம்மதத்துடன் பதிவழிப்பு செய்யப்பட்டுள்ளன. இதன் விளைவாக 2016 திசெம்பர் 31 அன்று உள்ளவாறு ஐந்தொகையில்ரூபா 69,536,282.63 நிலுவை காண்பிக்கப்பட்டுள்ளது.

3.3 பணிப்பாளர் சபை மாற்றங்கள்

2016 ஆம் நிதியாண்டின் போது 2016டிசம்பர் மாதம் தொடக்கம் புதிய பணிப்பாளர் சபை நியமிக்கப்பட்டது.

4. முக்கிய கணக்கீட்டு கொள்கைகள்

கீழே எடுத்துரைக்கப்பட்டுள்ள கணக்கீட்டு கொள்கைகள் இந் நிதியியல் கூற்றுகளில் எடுத்துரைக்கப்பட்ட அனைத்து காலங்களுக்கும் மாற்றமின்றி பிரயோகிக்கப்பட்டு வருகின்றன.

4.1 கடன் பெறு செலவுகள்

அவற்றின் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டுக்கு அல்லது விற்பனைக்காக தயாராகுவதற்கு கணிசமான காலப் பகுதியினை எடுப்பதற்கு தேவையுடைய சொத்துகளாக தகைமை பெறுகின்ற சொத்துகளின் கையேற்புக்கு, நிருமாணத்திற்கு அல்லது உற்பத்திக்கு நேரடியாக சாட்டத்தக்க பொதுவான மற்றும் குறிப்பான கடன் பெறுதல் செலவுகள், அவற்றின் உத்தேச பயன்பாட்டிற்காக அல்லது விற்பனைக்காக சொத்துகள் கணிசமான அளவில் தயாராகவுள்ளவாறான அத்தகைய காலம் வரை அச் சொத்துக்களின் செலவிற்கு சேர்க்கப்படுகின்றன.

கடன் பெறுதல் செலவுகளை மூலதனமாக்குவதானது சொத்துக்கான செலவினத்தை அது ஏற்படுத்துகின்ற போது, கடன் பெறு செலவுகளை அது ஏற்படுத்துகின்ற போது மற்றும் அவற்றின் உத்தேசிக்கப்பட்ட பயன்பட்டிற்காக அல்லது விற்பனைக்காக சொத்தினை பயன்படுத்துவதற்கு அவசியமான நடவடிக்கைகளை அது பொறுப்பேற்கின்ற போது ஆரம்பிக்கின்றது. அவற்றின் உத்தேசிக்கப்பட்ட பயன்பாடு நிறைவுசெய்யப்பட்டுள்ளமைக்காக தகைமை பெறும் சொத்தினை தயார்படுத்துவதற்கு அவசியமான அனைத்து நடவடிக்கைகளும் கணிமான அளவு நிறைவு செய்யப்பட்டுள்ள போது மூலதனமாக்கலை அது நிறுத்துகின்றது தகைமை பெறும் சொத்தொன்றின் செயற்பாடுமிக்க விருத்தியினை அது இடைநிறுத்துமாயின் கடன் பெறுதல் செலவுகளின் மூலதனமாக்கலானது இடைநிறுத்தப்படல் வேண்டும்.

சபையானது பொதுவாக நிதியங்களை கடன் பெற்று தேயிலை, இறப்பர் மற்றும் எண்ணைய் தாவரங்கள் போன்ற முதிர்ச்சியடையாத தோட்டங்களாக தகைமை பெறுகின்ற சொத்துக்காக அவற்றை பயன்படுத்துகின்றது. மேற்குறித்த உயிரியல் சொத்துக்கள் மீதான செலவினத்திற்கான மூலதனமாக்கல் வீதமொன்றினை பிரயோகிப்பதன் வாயிலாக சபையானது மூலதனமாக்களுக்கான தகைமையுள்ள கடன்பெறு செலவுகளின் தொகையினை நிர்ணயிக்கின்றது. இந் நோக்கத்திற்காக பொதுவான கடன் பெறுதல்களுக்கு ஏற்புடைய கடன்பெறுதல் செலவுகளின் நிறையேற்றப்பட்ட சராசரியினை சபை பயன்படுத்துகின்றது. அனைத்து ஏனைய கடன் பெறு செலவுகளும் அவை ஏற்பட்டுள்ள காலப்பகுதியில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் இனங்காணப்படுகின்றன. தகைமை பெறுகின்ற சொத்துக்கள் மீதான அவற்றின் செலவினம் முடிவுறாதுள்ள குறித்த கடன் பெறுதல்களின் தற்காலிக முதலீடுகள் மீது ஈட்டப்பட்ட முதலீட்டு வருவாயானதுமூலதனமாக்களுக்கு தகைமையான கடன் பெறு செலவிலிருந்து குறைக்கப்படுகின்றது.

4.2 சொத்துகளும் அவற்றின் மதிப்பிட்டு அடிப்படைகளும்

நிதியியல் நிலைக்கூற்றில் நடைமுறை சொத்துகளாக வகைப்படுத்தப்பட்ட சொத்துகள் காசு மற்றும் வங்கி நிலுவைகள் அத்துடன் சாதாரண தொழிற்பாட்டு சுழற்சியின் போது அல்லது அறிக்கையிடும் ஒரு வருட காலத்தினுள், எது குறுகியதோ அதனுள் காசாக தேறுவதற்கு எதிர்பார்க்கப்பட்டவைஆகியனவாகும். நடைமுறை சொத்துக்கள் தவிர்ந்த ஏனைய சொத்துக்களானவை அறிக்கையிடும் திகதியிலிருந்து கணிக்கப்பட்ட ஒரு வருட காலத்தினை தாண்டி சபை பிடித்து வைப்பதற்கு உத்தேசிக்கின்ற சொத்துக்களாகும்.

நடைமுறையல்லாத சொத்துக்கள் நீண்ட காலமாக மீள் விலைமதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை எனவே தற்போதைய பெறுமதியானது நிதியியல் கூற்றுகளில் குறிப்பிடப்பட்ட தொகைகளிலிருந்து வேறுபடும்.

4.2.1. ஆதனம் பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள்

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் இனங்காணலும் அளவீடும் ஒன்று திரண்ட பெறுமானத் தேய்வு மற்றும் மதிப்பிழப்பு நட்டங்களை கழித்து செலவு / விலைமதிப்பீட்டில் பதிவு செய்யப்படுகின்றன. ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் செலவென்பது அதன் உத்தேசிக்கப்பட்ட பயன்பாட்டிற்காக அதன் பயன்பாட்டு நிலைமைக்கு அச்சொத்துகளை கொண்டுவருவதில் ஏற்பட்ட ஏதேனும் செலவுகளுடன் சேர்த்து கொள்வனவு அல்லது நிர்மாணச் செலவாகும்.

தொடர்புடைய உபகரணமொன்றின் தொழிற்பாட்டுக்கு ஒருங்கிணைக்கப்பட்டுள்ள கொள்வனவு செய்யப்பட்டுள்ள மென்பொருள், உபகரண பாகமாக மூலதனமாக்கப்பட்டுள்ளது. ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண வகையொன்றின் பாகங்கள் வேறுபட்ட பயன்பாட்டு ஆயுட் காலங்களை கொண்டுள்ள போது அவை ஆதனம் பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் தனியான விடயங்களாக (பிரதான கூறு) கணக்கிடப்படுகின்றன.

4.2.2 தொடர்ந்து வரும் செலவுகள்

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண வகையொன்றின் பாகத்தினை மாற்றீடு செய்கின்ற செலவானது பாகத்தினுள் உற்பொதிந்துள்ள எதிர்கால பொருளாதார நலன்கள் சபைக்கு கிடைக்கும் என்றும் அதன் செலவுகள் நம்பகத்தகுந்தவாறு அளவிடக்கூடியதாக இருக்கும் என்றும் சாத்தியம் காணப்படுமாயின் வகையின் கொண்டு செல்லும் தொகையில் இனங்காணப்படுகின்றது. மாற்றீடு செய்யப்பட்ட பாகத்தின் கொண்டு செல்லும் தொகையானது இனங்காணப்படுவதில்லை.ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களை நன்னிலைப்படுத்துகின்ற நாளாந்த செலவுகள்,ஏற்பட்டவாறு இலாபத்தில் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன.

4.2.3 பெறுமானத் தேய்வும் பெறுமதி இழப்பும்

பெறுமானத் தேய்வானது ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் வகையின் ஒவ்வொரு பாகத்தினதும் மதிப்பிடப்பட்ட பயன்பாட்டு ஆயுட் காலத்தின் மீது நேர்நிலை அடிப்படையில் இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றது. சொத்தொன்றின் பெறுமானத் தேய்வானது பயன்பாட்டிற்காக அது கிடைக்கின்ற போது ஆரம்பிக்கின்ற அதே வேளை விற்பனைக்காக அது வைக்கப்பட்டதாக சொத்து வகைப்படுத்தப்படுவதற்கு (அல்லது விற்பனைக்காக வைக்கப்பட்டவையாக வகைப்படுத்தப்பட்டு கையுதிர்ப்பதற்கு சபைஉள்ளடக்கிய) முந்திய திகதியில் நிறுத்தப்படுமென்பதுடன், அத்திகதி இனங்காணப்படாததிகதியாகவிருக்கும். இறையிலிக் காணிகள் மீது பெறுமானத்தேய்வு விதிக்கப்படுவதில்லை.

# வருடாந்த அறிக்கை – 2016

கீழே குறிப்பிடப்பட்ட வீதத்தில் சொத்துகளின் பயன்பாட்டு ஆயுட்காலத்தின் மீது சொத்துகள் பெறுமானத்தேய்வு செய்யப்படுகின்றன.

| | தோட்டங்கள் | தலைமை அலுவலகம் |
|---|---|---|
| கட்டடங்கள் | 5% | 5% |
| பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள் (பழையது) | 33.33% | 12.5% |
| பொறித்தொகுதி மற்றும் இயந்திரங்கள் (புதியது) | 20% | 20% |
| வரிசைக்குடியிருப்புகளும் கழிவறைகளும் | 5% | |
| மோட்டார் வாகனங்கள் | 25% | 25% |
| தளபாடம் மற்றும் பொருத்துகள் | 12.5% | 12.5% |
| முதிர்ந்த தோட்டங்கள் | 5% | |
| வீதிகள் மற்றும் பாலங்கள் | 5% | |
| நீர் மின்சார பொறித்தொகுதி | 5% | |
| கணனிகள் மற்றும் அச்சு இயந்திரம் (புதியவை) | 20% | 20% |
| கணனிகளும் மற்றும் அச்சு இயந்திரங்களும் | 12.5% | 12.5% |

### 4.2.4. கணினி மென்பொருள்

தெளிவாக இனங்காணப்படக்கூடிய, நம்பகமாக அளவிடக்கூடிய மற்றும் அவை எதிர்கால பொருளாதார நலன்களுக்கு வழிவகுக்கும் சாத்தியமுள்ள இணைந்த வன்பொருளுக்கு உள்ளக ரீதியாக தொடர்பற்ற அனைத்து கணினி மென்பொருளுக்கும் ஏற்பட்ட செலவுகள் அருவச் சொத்து வகையின் கீழ் நிதியியல் நிலைக்கூற்றில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

### 4.2.5. நிரந்தர காணி அபிவிருத்தி செலவுகள்

நிரந்தரக் காணி அபிவிருத்தி செலவுகளானவை புதிய வழிப் பாதைகளையும் ஏனைய பிரதான உட்கட்டமைப்புகளையும் கட்டுவிப்பதற்கு காணி சமவுயரக் கோடுகளுக்கான பிரதான மாற்றங்களை ஏற்படுத்த ஏற்பட்ட செலவுகளாகும். இவ் வகையான கருத்திட்டங்களுக்காக ஏற்பட்ட செலவு சபையின் பெறுமானத் தேய்வு கொள்கைக்கு அமைவாக (வீதி, பாலங்கள் வேலி போன்றன) பெறுமானத் தேய்வு செய்யப்பட்டுள்ளதுடன், மூலதனமாக்கப்பட்டுள்ளன.

4.2.7 முதலீட்டு ஆதனங்கள் (வாடகை விடப்பட்ட காணி மற்றும் கட்டிடங்கள்)

முதலீட்டு ஆதனமென்பது வாடகை வருமானத்தை உழைப்பதற்காகவோ அல்லது மூலதன பெறுமதி ஏற்றத்திற்காகவோ அல்லது இரண்டிற்குமாகவோ வைக்கப்பட்ட ஆதனமொன்றாகும் என்பதுடன், சாதாரண வியாபார நடவடிக்கையில் விற்பனை செய்யவோ, உற்பத்தியில் அல்லது பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குதலில் அல்லது நிருவாக நோக்கங்களுக்கான பயன்பாட்டிற்கோ அல்லாதவையாகும். முதலீட்டு ஆதனமானது ஆரம்ப இனங்காணலில் செலவில் அளவிடப்படுவதுடன் அதனை தொடர்ந்து, இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்பட்ட அவற்றிலான ஏதேனும் மாற்றத்துடன் சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்படுகின்றது.

முதலீட்டு ஆதன விற்பனை மீதான ஏதேனும் வருவாய் அல்லது நட்டம் (வகையின் விற்பனையிலிருந்தான தேறிய பெறுகைகள் மற்றும் கொண்டுள்ள தொகை என்பவற்றிக்கிடையிலான வேறுபாடாக கணிக்கப்பட்டவை) இலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன. ஆதனம்,பொறித் தொகுதி மற்றும் உபகரணமாக முன்னர் வகைப்படுத்தப்பட்டிருந்த முதலீட்டு ஆதனம் விற்பனை செய்யப்படும் போது மீள்விலை மதிப்பீட்டு ஒதுக்கில் உள்ளடக்கப்பட்டிருந்த ஏதேனும் தொடர்புடைய தொகையானது பிடித்துவைக்கப்பட்ட உழைப்புகளுக்கு மாற்றல் செய்யப்படுகின்றது.

4.2.8 வரையறைமிக்க ஆயுள் கொண்ட காணி அபிவிருத்திச் செலவுகள்

முதிர்வடையாத மற்றும் முதிர்வுற்ற பயிர் தோட்டங்கள்

மீள்நடுகை மற்றும் புதிய நடுகை என்பவற்றிக்கு நேரடியாக சாட்டத்தக்க செலவுகள், பயிர் அறுவடைக் காலம் வரை முதிர்வடையாத தோட்டங்களாக வகைப்படுத்தப்படுகின்றன. சந்தை நிர்ணயித்த விலைகள் அல்லது பெறுமதிகள் கிடைக்கப்பெறாமையினாலும்,சீர்மதிப்புபெறுமதியின் மாற்றுவழி மதிப்பீடுகள், தெளிவாக நம்ப முடியாதவாறு இருப்பதாக நிர்ணயிக்கப்பட்டவற்றுக்கும் சபையானது தேயிலை, இறப்பர் மற்றும் எண்ணெய் தாவரங்கள் போன்ற உயிரியல் சொத்துகளை கொண்டுள்ள முதிர்வடையாத மற்றும் முதிர்வுற்ற தோட்டங்களை இகநி 16 ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் கீழ் உயிரியல் சொத்துக்களை கொண்டுள்ளவைகளை மதிப்பிடுவதற்கு இலங்கை பட்டயக் கணக்காய்வாளர் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட விதிகளுக்கு இணங்க ஆரம்ப இனங்காணலில் ஏதேனும் ஒன்றுதிரட்டிய பெறுமானத்தேய்வு மற்றும் ஒன்றுதிரட்டிய மதிப்பிழப்பு நட்டங்கள் என்பவற்றை கழித்து அதன் செலவில் இனங்காணுகின்றது.

நாற்று மேடைகளின் சீர்மதிப்பு பெறுமதி இலகுவாக நிர்ணயிக்கப்பட முடியாதது என்பதனால் அவை செலவில் கொண்டு செல்லப்படுகின்றன. நேரடியான பொருட்கள், நேரடி ஊழியம் மற்றும் நிருவாகச் செலவுகளுக்கு நேரடியாக சாட்டத்தக்க வேறு பொருத்தமாக பாகங்கள் என்பவற்றை செலவுகள் உள்ளடக்குகின்றன. அத்தகைய உயிரியில் ரீதியான சொத்தொன்றின் சீர்மதிப்பு பெறுமதி நம்பகத்தகுந்தவாறு அளவிடப்படக்கூடியதாக வருகின்ற போது சபையானது அதனை விற்பனை செய்வதற்கான செலவினை கழித்து சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடுகின்றது.

பயிரின் முதிர்ச்சி வரை அல்லது அறுவடை வரை காணி தயார்படுத்தல், நடுகை, பயிர் விருத்தி போன்றவற்றின் அனைத்து செலவுகளும் உயிரியல் சொத்தாக மூலதனமாக்கப்படுகின்றன. முதிர்ச்சியினை தொடர்ந்துவரும் அனைத்து செலவுகளும் இலாபம் நட்டக் கூற்றில் நேரடியாக இனங்காணப்படுகின்றன. மீள்நடுகை மற்றும் புதிய நடுகைகள் மீது ஏற்படும் பொதுவான செலவுகள் தொடர்புடைய மீள் நடுகை மற்றும் புதிய நடுகை மீது செலவிடப்பட்ட ஊழிய நாட்களின் அடிப்படையில் வகைப்படுத்தப்பட்டு முதிர்வடையாத

பிரதேசங்கள் மீது மூலதனமாக்கப்படுகின்றன. பொதுச் செலவுகளின் எஞ்சியுள்ள பாகம் அது ஏற்பட்ட கணக்கீட்டு காலத்தில் செலவிடப்படுகின்றன.

| | முதிர்வடையாத காலம் | அறுவடை ஆரம்பித்தல் |
|---|---|---|
| தேயிலை | 1 – 4 ஆண்டுகள் | 05 ஆவது ஆண்டு |
| இறப்பர் | 1 – 6 ஆண்டுகள் | 07 ஆவது ஆண்டு |

4.2.9 இடைநிரப்புதல் செலவு

இடைநிரப்பல் வடிவில் ஏற்பட்ட காணி அபிவிருத்திச் செலவுகள், அதன் இடைநிரப்பலுக்கு முந்திய செயலாற்றுகையினைத் தாண்டி, அத்தோட்டத்திலிருந்து எதிர்பார்க்கப்படும் பொருளாதரா நலன்கள் அதிகரிக்குமிடத்து மாத்திரம், தொடர்புடைய முதிர்வற்ற தோட்டத்திற்கு மூலதனமாக்கப்படுகின்றன. அவ்வாறு மூலதனமாக்கப்படுகின்ற இடைநிரப்புதல் தொடர்புடைய தோட்டத்தின்புதிய சொத்துகளின் எஞ்சியுள்ள பொருளாதார ஆயுட்காலத்தின் மீது அல்லது எதிர்பார்க்கப்பட்ட குத்தகை காலத்தின் மீது. எது குறைவானதோ அதற்கு தேய்மானம் செய்யப்படுகின்றது.

அறுப்பு மர பயிர்கள்

அறுப்பு மர பயிர்கள்,ஆரம்ப இனங்காணலின் மீது சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்படுவதுடன், அறிக்கையிடும் ஒவ்வொரு காலப்பகுதியின் இறுதியிலும் விற்பனைக்கான செலவினை கழித்து சீர்மதிப்பு பெறுமதியில் அளவிடப்படுகின்றது. இது போக்குவரத்துச் செலவு உள்ளடங்கள சொத்துகளை விற்பனை செய்ய அவசியமாக இருக்கின்ற அனைத்து செலவுகளையும் உள்ளடக்குகின்றது.

அறுப்பு மர பயிர்களின் ஆரம்ப இனங்காணலின் மீது தோன்றும் வருவாய் அல்லது நட்டம் விற்பனை செய்வதற்கான செலவுகளை கழித்தும் ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் தோட்டங்களின் செலவுகளை கழித்தும் சீர்மதிப்பு பெறுமதியிலும் மாற்றத்திலிருந்தும் அவை எழுகின்ற காலப் பகுதிக்காக இலாபம் அல்லது நட்டக்கூற்றில் உள்ளடக்கப்படுகின்றன. இச் சொத்துக்களை பராமரிப்பதில் ஏற்படுகின்ற அனைத்து செலவுகளும் அவை ஏற்படுகின்ற ஆண்டில் இலாபம் அல்லது நட்டக் கூற்றில் உள்ளடக்கப்படுகின்றன.

உயிரியல் சொத்துகள்

உயிரியல் சொத்துகளானவை கடந்த கால விளைவொன்றின் பயனாக சொத்துகளை சபை கட்டுப்படுத்துமாயின் இனங்காணலுக்கு தகைமை பெற்றதாக இருக்கும்.சொத்துகளுடன் இணையப்பெற்ற எதிர்கால பொருளாதார நன்மைகள் சபைக்கு கிடைக்குமென சாத்தியமிருப்பின் அத்துடன் சொத்தின் சீர்மதிப்பு பெறுமதி அல்லது செலவு நம்பகத்தகுந்தவாறு அளவிடப்படக்கூடியதாக இருப்பின் தகைமை பெறும்.

4.2.10 பதிவேட்டுப் பொருட்கள்

உற்பத்தி கையிருப்பு மற்றும் நாற்று மேடைகள் தவிர பதிவேட்டுப் பொருட்கள், பயன்பாட்டிலிருந்து ஒதுக்கப்பட்டவை மற்றும் மெதுவாக அசையும் பொருட்களுக்காக உரிய ஒதுக்கீடுகள் ஏற்படுத்தப்பட்ட பின்னர் குறைந்த செலவில் அத்துடன் நிகர தேறத்தக்க பெறுமதியில் குறிப்பிடப்படுகின்றன. சபையானது பதிவேட்டுப் பொருட்களின் செலவுகளை குறித்தொதுக்குகையில் நிறைவேற்றப்பட்ட சராசரிச் செலவு/ முதல் உள்வருதல் முதல் வெளியில் செல்லுதல் சூத்திரத்தினை பயன்படுத்துகின்றது. செலவானது கையிருப்புகளை கையேற்றல் செலவுகள், உற்பத்தி மற்றும் பாதுகாப்பு செலவு அவற்றின் தற்போதைய அமைவிடத்திற்கு மற்றும் நிலைமைக்கு அவற்றை கொண்டு வருவதற்கு ஏற்பட்ட ஏனைய செலவுகள் என்பனவற்றை உள்ளடக்குகின்றது.

தேறிய நிகரத்தக்க பெறுமதியானது பூர்த்தி செய்ய மதிப்பிடப்பட்ட செலவு மற்றும் விற்பனை மேற்கொள்ள அவசியமான மதிப்பிட்ட செலவு என்பவற்றை கழித்து சாதாரண விற்பனை நடவடிக்கையில் விற்பனை விலையில் மதிப்பிடப்படுகின்றன.

ஐந்தொகை திகதி வரை தயாரிக்கப்பட்ட மற்றும் அப்போதிருந்து நிதியியல் கூற்றுகள் தயாரித்த நேரம் வரை விற்பனை செய்யப்பட்டவை,அப்போதிருந்து தேறத்தக்க விலையில் விலை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. மீதி கையிருப்புகள் மதிப்பிடப்பட்ட விற்பனை விலையில் விலை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளன. விலைகள் பொது ஏலத்துடன் தொடர்புடைய அனைத்து சாட்டத்தக்க செலவுகளும் கழிக்கப்பட்டவையாகும்.

தேயிலை கிலோ கிராம் ஒன்றின் உற்பத்தி செலவு எப்போதும் நிகர தேறத்தக்க பெறுமதியினை விட உயர்வானதாகும்.

நிதியியல் சொத்துக்கள்

இகநி 39 இன் நோக்கெல்லையினுள் நிதியியல் சொத்துகளின் ஆரம்ப இனங்காணலும் அளவிடுதலும், இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் உள்ள நிதியியல் சொத்துக்கள், கடன் மற்றும் கிடைக்கப்பெறத்தக்கவைகள், முதிர்வுக்காக வைக்கப்பட்ட முதலீடுகள், விற்பனைக்காக கிடைக்கப்பெறும் நிதியியல் சொத்துக்கள் ஆக அல்லது பொருமத்தமானவாறு செயல்திறன் மிக்க காப்பொன்றில் காப்பு சாதனங்களாக குறிக்கப்பட்ட பெறுமதிகளாக வகைப்படுத்தப்படுகின்றன. சபையானது அதன் நிதியியல் சொத்துகளின் வகைப்படுத்தலை ஆரம்ப இனங்காணலில் நிர்ணயிக்கின்றது.

அனைத்து நிதியியல் சொத்துகளும் சீர்மதிப்பு பெறுமதியுடன் சேர்த்து.சீர்மதிப்பு பெறுமதியில் இல்லாத சொத்துகள் தொடர்பில் இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக நேரடியாக சாட்டத்தக்க கொடுக்கல் வாங்கல் செலவுகளுடன் ஆரம்பத்தில் இனங்காணப்படுகின்றன. சந்தையில் ஒழுங்குவிதியினால் அல்லது வழக்கத்தினால் தாபிக்கப்பட்ட நேர கட்டமைப்பொன்றினுள் சொத்துக்களின் ஒப்படைப்பினை தேவைப்படுத்தும் (கிரமமான வழியிலான வணிகங்கள்) நிதியல் சொத்துகளின் கொள்வனவு அல்லது விற்பனை. வணிகத் திகதியில் அதாவது சொத்தினை கொள்வனவு செய்வதற்கு அல்லது விற்பனை செய்ய சபை பொறுப்பேற்கும் திகதியில் இனங்காணப்படுகின்றன. சபையின் நிதியியல் சொத்துகளானவை காசு மற்றும் காசுக்கு சமமானவை, குறுகிய கால வைப்புகள், தேயிலை வழங்குனர்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள், வர்த்தக மற்றும் ஏனைய கிடைப்பனவுகள் என்பன உள்ளடக்குகின்றது.

# வருடாந்த அறிக்கை – 2016

தொடர்கின்ற அளவீடு

நிதியியல் சொத்துகளின் தொடர்கின்ற அளவீடானது கீழே விவரிக்கப்பட்டவாறு அவற்றின் வகைப்படுத்தலை சார்ந்திருக்கும்:

இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் உள்ள நிதியியல் சொத்துகளானவை வர்த்தகத்திற்காக வைக்கப்பட்ட நிதியியல் சொத்துகள் மற்றும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணலின் மீது குறிக்கப்பட்ட நிதியியல் சொத்துகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. நிதியியல் சொத்துகள், அண்மைய காலத்தில் விற்பனை செய்கின்ற அல்லது மீள்கொள்வனவு செய்கின்ற நோக்கத்திற்காக அவை கையேற்க்கப்பட்டிருப்பின் வர்த்தகப்படுத்தலுக்காக கையேற்க்கப்பட்டிருப்பின் வகைப்படுத்தப்படுகின்றன. இவ்வகையானது இகநி 39 இனால் வரைவிலக்கனம் செய்யப்பட்டவாறு காப்பு தொடர்புகளில் காப்பிடுகின்ற சாதனங்களாக குறிக்கப்படாத சபையினால் பொறுப்பேற்கப்பட்ட பெறுமதி நிதியியல் சாதனங்களை உள்ளடக்குகின்றது. வேறாக்கப்பட்ட உற்பொதிந்த பெறுதிகள் உள்ளடங்களாக பெறுதிகள் விளைவுமிக்க காப்பு சாதனங்களாக அவை குறிக்கப்பட்டாலன்றி வர்த்தகப்படுத்தலுக்காக வைக்கப்பட்டவையாக வகைப்படுத்தப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் உள்ள நிதியியல் சொத்துகள், வருமானக் கூற்றில் நிதி வருமானம் அல்லது நிதிச் செலவுகளில் இனங்காணப்பட்ட சீர்மதிப்பு பெறுமதியல் உள்ள மாற்றங்களுடன் சீர்மதிப்பு பெறுமதியில் நிதியியல் நிலைக் கூற்றில் கொண்டு செல்லப்படுகின்றன. சபையானது அதன் நிதியியல் சொத்துகளை அண்மைய காலத்தில் அவற்றை விற்பனை செய்வது பொருத்தமானதா என்ற நோக்கம் இருப்பின் இலாபம் அல்லது நட்டம் ஊடாக (வர்த்தகத்திற்காக வைக்கப்பட்டவை) சீர்மதிப்பு பெறுமதியில் மதிப்பிடுகின்றது. செயற்பாடற்ற சந்தைகளின் காரணமாக அல்லது முன்னறிகின்ற எதிர்காலத்தில் அவற்றை விற்பனை செய்வதற்கான முகாமைத்துவ உத்தேசத்தின் காரணமாக இந்நிதியில் சொத்துகளை வர்த்தகப்படுத்துவதற்கு சபை இயலாதிருக்கலாம்.

முக்கிய மாற்றங்கள் காணப்படுகின்ற போது சபையானது அரிதான சூழ்நிலைகளில் இந்நிதியியல் சொத்துகளை மீள வகைப்படுத்துவதற்கான தெரிவினைமேற்கொள்ளலாம். கடன்கள் மற்றும் கிடைக்கப்பெறத்தக்கவை, விற்பனைக்காக கிடைக்கப்பெறத்தக்கவை அல்லது முதிர்வுக்காக வைக்கப்பட்டவை என்பவற்றுக்கான வகைப்படுத்தல் சொத்தின் தன்மையினை சார்ந்திருக்கும்.

இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் உள்ள நிதியியல் சொத்துகள்

இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் உள்ள நிதியியல் சொத்துகளானவை வர்த்தகத்திற்காக வைக்கப்பட்ட நிதியியல் சொத்துகள் மற்றும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக நியாயப் பெறுமதியில் ஆரம்ப இனங்காணலின் மீது குறிக்கப்பட்ட நிதியியல் சொத்துகள் என்பவற்றை உள்ளடக்குகின்றது. நிதியியல் சொத்துகள், அண்மைய காலத்தில் விற்பனை செய்கின்ற அல்லது மீள்கொள்வனவு செய்கின்ற நோக்கத்திற்காக அவை கையேற்க்கப்பட்டிருப்பின் வர்த்தகப்படுத்தலுக்காக கையேற்க்கப்பட்டிருப்பின் வகைப்படுத்தப்படுகின்றன. இவ்வகையானது இகநி 39 இனால் வரைவிலக்கனம் செய்யப்பட்டவாறு காப்பு தொடர்புகளில் காப்பிடுகின்ற சாதனங்களாக குறிக்கப்படாத சபையினால் பொறுப்பேற்கப்பட்ட பெறுதி நிதியியல் சாதனங்களை உள்ளடக்குகின்றது. வேறாக்கப்பட்ட உற்பொதிந்த பெறுதிகள் உள்ளடங்களாக பெறுதிகள் விளைவுமிக்க காப்பு சாதனங்களாக அவை குறிக்கப்பட்டாலன்றி வர்த்தகப்படுத்தலுக்காக வைக்கப்பட்டவையாக வகைப்படுத்தப்படுகின்றன. இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் உள்ள நிதியியல் சொத்துகள், வருமானக் கூற்றில் நிதி வருமானம் அல்லது நிதிச் செலவுகளில் இனங்காணப்பட்ட சீர்மதிப்பு பெறுமதியல் உள்ள மாற்றங்களுடன் சீர்மதிப்பு பெறுமதியில் நிதியியல் நிலைக் கூற்றில் கொண்டு செல்லப்படுகின்றன.

சபையானது அதன் நிதியியல் சொத்துகளை அண்மைய காலத்தில் அவற்றை விற்பனை செய்வது பொருத்தமானதா என்ற நோக்கம் இருப்பின் இலாபம் அல்லது நட்டம் ஊடாக (வர்த்தகத்திற்காக வைக்கப்பட்டவை) சீர்மதிப்பு பெறுமதியில் மதிப்பிடுகின்றது. செயற்பாட்டற்ற சந்தைகளின் காரணமாக அல்லது முன்னறிகின்ற எதிர்காலத்தில் அவற்றை விற்பனை செய்வதற்கான முகாமைத்துவ உத்தேசத்தின் காரணமாக இந்நிதியில் சொத்துகளை வர்த்தகப்படுத்துவதற்கு சபை இயலாதிருக்கலாம்.

முக்கிய மாற்றங்கள் காணப்படுகின்ற போது சபையானது அரிதான சூழ்நிலைகளில் இந்நிதியியல் சொத்துகளை மீள வகைப்படுத்துவதற்கான தெரிவினை மேற்கொள்ளலாம். கடன்கள் மற்றும் கிடைக்கப்பெறத்தக்கவை, விற்பனைக்காக கிடைக்கப்பெறத்தக்கவை அல்லது முதிர்வுக்காக வைக்கப்பட்டவை என்பவற்றுக்கான வகைப்படுத்தல் சொத்தின் தன்மையினை சார்ந்திருக்கும்.

கடன்களும் கிடைக்கப்பெறத்தக்கவைகளும்

கடன்கள் மற்றும் கிடைக்கப்பெறத்தக்கவையென்பது செயற்பாடு மிக்க சந்தையொன்றில் விலை குறிக்கப்படாத நிலையான அல்லது நிர்ணயிக்கத்தக்க கொடுப்பனவுகளுடன் கூடிய பெறுதியல்லாத நிதியியல் சொத்துக்களாகும். ஆரம்ப அளவீட்டின் பின்னர் அதனை தொடரந்து அத்தகைய நிதியியல் சொத்துகள் விளைவு வட்டி வீத முறையைப் பயன்படுத்தி மதிப்பிழப்பினை கழித்து பெறுமதி குறைக்கப்பட்ட செலவில் அளவிடப்படுகின்றன. பெறுமதி குறைக்கப்பட்ட செலவு என்பது விளைவு வட்டி வீதத்தின் முக்கிய பாகமொன்றாக விளங்குகின்ற கையேற்றல் மீதான ஏதேனும் கழிவு அல்லது கட்டுப்பணம் அத்துடன் கட்டணங்கள் அல்லது செலவுகளை கருத்தில் கொண்டு கணிக்கப்படுவதாகும். விளைவு வட்டி வீத பெறுமதி குறைப்பானது வருமானக் கூற்றில் நிதி வருமானத்தில் உள்ளடக்கப்படுகின்றது.

விற்பனைக்காக கிடைக்கபெறும் நிதியியல் முதலீடுகள்

விற்பனைக்காக கிடைக்கப்பெறுமதி நிதியியல் சொத்துகளென்பது ஏதேனும் மேற்குறித்த நிதியல் சொத்து வகைகளின் வகைப்படுத்தப்படாத விற்பனைக்காக கிடைக்கத்தக்கவையாக குறிக்கப்பட்ட பெறுதி அல்லாத நிதியியல் சொத்துக்களாகும். விற்பனைக்காக கிடைக்கப்பெறுகின்ற நிதியியல் சொத்துகள், ஆரம்பத்தில் சீர்மதிப்பு பெறுமதியுடன் சேரத்து கொடுக்கல் வாங்கல் செலவிற்கு நேரடியாக சாட்டத்தக்க ஏதேனும் செலவுடன் இனங்காணப்படுகின்றன. ஆரம்ப இனங்காணலை தொடர்ந்து அவை சீர்திப்பு பெறுமதியில் அளவிடப்படுவதுடன் மதிப்பிழப்பு நட்டங்கள் தவிர அதனுள்ளான மாற்றங்கள் மற்றும் விற்பனையாக கிடைக்கப்பெற்ற படுகடன் சாதனங்கள் மீதான வெளிநாட்டு நாணய வேறுபாடுகள் என்பன ஏனைய அனைத்தையும் உள்ளடக்கிய வருமானக் கூற்றில் இனங்காணப்பட்டுபங்கு மூலதனத்திலுள்ள சீர்மதிப்பு பெறுமதி ஒதுக்கில் எடுத்துரைக்கப்படுகின்றன. மூலதனமொன்று இனங்காணப்படாதுள்ள போது பங்கு மூலதனத்தில் திரண்ட பெறுகை அல்லது நட்டம் இலாபத்திற்கு அல்லது நட்டத்திற்கு மீள் வகைப்படுத்தப்படுகின்றது. விற்பனைக்காக கிடைக்கப்பெறும் நிதியியல் சொத்துகள் படுகடன் பிணையங்களையும் பங்கு மூலதன பிணையங்களையும் உள்ளடக்குகின்றன.

இனங்காணமை

நிதியியல் சொத்தொன்று (அல்லது, ஏற்புடைய விடத்து நிதியியல் சொத்தின் பாகமொன்று அல்லது அதனையொத்த நிதியியல் சொத்தின் பாகம் குழுவின் பாகம்)• சொத்திலிருந்து காசுப் பாய்ச்சல்களை பெறுவதற்கான உரிமைகள் காலாவதியடைந்துள்ளதிலிருந்து,• சபையானது சொத்திலிருந்து காசுப் பாய்ச்சலினை பெறுவதற்கான அதன் உரிமையை மாற்றல் செய்துள்ள போது அல்லது "கடந்து செல்" ஒழுங்கொன்றின் கீழ் மூன்றாம் தரப்புக்கு முக்கிய தாமதமின்றி பெறப்பட்ட காசுப் பாய்ச்சல்களை கொடுப்பனவு செய்வதற்கான கடப்பாடொன்றினை ஊகித்துள்ள போது; அத்துடன் (அ)சபையானது சொத்தின் அனைத்து இடர்நேர்வுகளையும் கைமாறுகளையும்

கணிசமான அளவு மாற்றம் செய்துள்ள போது (ஆ) சபையானது சொத்தின் அனைத்து இடர்நேர்வுகளையும் கைமாறுகளையும் மாற்றல் செய்து அல்லது தக்கவைத்தோ இல்லாத ஆனால் சொத்தின் கட்டுப்பாட்டினை மாற்றல் செய்துள்ளபோது. இனங்காணப்படுவதில்லை.

சபையானது சொத்தொன்றிலிருந்து காசுப்பாய்ச்சல் பெற்றுக்கொள்வதற்கான அதன் உரிமைகளை மாற்றல் செய்துள்ள போது அல்லது கடந்து செல் ஒழுங்கொன்றினை பொறுப்பேற்றுள்ளபோது. அத்துடன் சொத்தின் அனைத்து இடர்நேர்வுகளையும் கைமாறல்களையும் கணிசமாக மாற்றல் செய்யாது அல்லது வைத்திருக்காது அல்லது அதன் கட்டுப்பாட்டினை மாற்றல் செய்யாது உள்ள போது சொத்தானது அதன் மீது சபை தொடர்ச்சியான ஈடுபடுகின்றது என்ற அடிப்படையில் இனங்காணப்படுகின்றது..

அத்தகைய சந்தர்ப்பத்தில் சபையானது இணையப்பெற்ற பொறுப்பொன்றினையும் இனங்காண்கின்றது. மாற்றல் செய்யப்பட்ட சொத்தும் இணையப்பெற்ற பொறுப்பும் சபை பிடித்து வைத்துள்ள உரிமைகளையும் கடப்பாடுகளையும் பிரதிபலிக்கின்ற அடிப்படையில் அளவிடப்படுகின்றன.

நிதியியல் சொத்துகளின் மதிப்பிழப்பு

சபையானது நிதியியல் சொத்தொன்று அல்லது நிதியியல் சொத்தொனிறின் குழு மதிப்பிழந்துள்ளது என்ற ஏதேனும் புறநிலை சான்று காண்படுகின்றதா என்பதனை ஒவ்வொரு அறிக்கையிடும் திகதியிலும் மதிப்பிடுகின்றது. சொத்தின் ஆரம்ப இனங்காணலின் பின்னர் நிகழ்ந்துள்ள ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட நிகழ்வுகளின் விளைவாக புறநிலை மதிப்பிழப்பு சான்றொன்று காணப்படுமாயின் அத்துடன் அது மாத்திரமிருப்பின் (ஏற்பட்ட"நட்ட நிகழ்வு") அத்துடன் அந் நட்ட நிகழ்வானது நிதியியல் சொத்தொன்றின் அல்லது நிதியியல் சொத்துக் குழுவின் நம்பகமாக அளவிடப்படக்கூடிய மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல் நட்ட நிகழ்வு தாக்கமொன்றினை கொண்டிருப்பின் நிதியியல் சொத்தொன்று அல்லது நிதியியல் சொத்தொன்றின் குழுவொன்று மதிப்பிழந்துள்ளதாக கொள்ளப்படுகின்றது.

மதிப்பிழப்பு சான்றானது கடன்படுனர் அல்லது கடன்படுனர் குழு முக்கிய நிதியியல் கஸ்டங்களை அனுபவிக்கின்ற,வட்டி அல்லது முதன்மை கொடுப்பனவுகளை நிறைவேற்றாமை. அல்லது அவர்கள் வங்குரோத்து நிலைக்கு உள்ளாகின்ற அல்லது வேறு நிதியியல் மீள் ஒழுங்கமைப்பு உருவாகின்ற சாத்திய குறிகாட்டிகள் அத்துடன் தவணை தவறுதல்களுடன் ஒருங்கிணையும் நிலுவை மற்றும் பொருளாதார நிலைமைகளில் மாற்றங்கள் போன்ற மதிப்பிடப்பட்ட எதிர்கால காசுப்பாய்ச்சல்களில் அளவிடத்தக்க குறைவொன்று காணப்படுகின்றது என்ற அவதானிக்கத்தக்க குறிகாட்டிகள் என்பவற்றை உள்ளடக்கலாம்.

நிதியியல் பொறுப்புகள்

ஆரம்ப இனங்காணலும் அளவிடுதலும்

இகநி 39 நோக்கெல்லையினுள் நிதியியல் பொறுப்புகளனாவைஇலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் நிதியியில் பொறுப்புகள், கடன்கள் மற்றும் கடன் பெறுதல்கள்,அல்லது பொருத்தமானவாறு விளைவுமிக்க காப்பொன்றில் காப்பு சாதனங்களாக குறிக்கப்பட்ட பெறுதிகள் என்பனவாக வகைப்படுத்தப்படுகின்றன. சபையானது ஆரம்ப இனங்காணலில் அதன் நிதியியல் பொறுப்புகளின் வகைப்படுததலினை நிர்ணயிக்கின்றது.

அனைத்து நிதியியல் பொறுப்புகளும் ஆரம்பத்தில் சீர்மதிப்பு பெறுமதியில் உள்ளக்கப்படுவதுடன் கடன்கள் மற்றும் கடன் பெறுதல்கள் தொடர்பில், கடன் தீர்செலவில் கொண்டு செல்லப்படுகின்றன. இது. கொடுக்கல் வாங்கல் செலவுகளுக்கு நேரடியாக சாட்டத்தக்கவற்றை உள்ளடக்குகின்றது. சபையின் நிதியியல் பொறுப்புகளாக வர்த்தக மற்றும் ஏனைய கொடுக்கப்படவேண்டியவைகள் மற்றும் வங்கி மேலதிகப் பற்றுகள் மற்றும் கடன்பாடுகள் என்பவை உள்ளடக்கபடுகின்றன.

தொடர்ந்து வரும் அளவீடு

நிதியியல் பொறுப்புகளின் அளவீடானது பின்வருமாறு அவற்றின் வகைப்படுத்தலினை சார்ந்திருக்கும்

இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியிலுள்ள நிதியியல் பொறுப்புகள்

இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியிலுள்ள நிதியியல் பொறுப்புகளானவை வர்த்தகப்படுத்தலுக்கு வைத்திருக்கும் நிதியியல் பொறுப்புகள் மற்றும் இலாபம் அல்லது நட்டம் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் உள்ளவையாக ஆரம்ப இனங்காணலின் மீது குறிக்கப்பட்ட நிதியியல் பொறுப்புகள் என்பவற்றை உள்ளடக்குகின்றன.

அண்மைய காலத்தில் விற்பனை செய்யும் நோக்கத்திற்கு அவை பெற்றுக்கொள்ளப்பட்டிருப்பின் வர்த்தகத்திற்கு வைக்கப்பட்டவையாக அவை கணக்கில்கொள்ளப்படுகின்றன. இவ்வகையானது இகநி 39 வரைவிலக்கனப்படுத்தப்பட்டவாறு காப்பு தொடர்ப்புகளில் காப்பு சாதனங்களாக குறிக்கப்படாத சபையினால் பொறுப்பேற்கப்பட்ட பெறுதி நிதியியல் சாதனங்களை உள்ளடக்குகின்றது. வேறாக்கப்பட்ட உற்பொதிந்துள்ள பெறுதிகளும் விளைவுமிக்க காப்பு சாதனங்களாக அவை குறிக்கப்பட்டாலின்றி வர்த்தகப்படுத்தலுக்கு வைக்கப்பட்டவையாக வகைப்படுத்தப்படுகின்றன. வர்த்தகப்படுத்தலுக்காக வைக்கப்பட்ட பொறுப்புகள் மீதான பெறுகை அல்லது இழப்புஇலாபம் அல்லது நட்டத்தில் இனங்காணப்படுகின்றன. சபையானது இலாபம் அல்லது நட்டத்தின் ஊடாக சீர்மதிப்பு பெறுமதியில் உள்ளவையாக ஆரம்ப இனங்காணல் மீது ஏதேனும் நிதியியல் பொறுப்புகளை குறித்திருக்கவில்லை.

கடன்களும் கடன்பாடுகளும்

ஆரம்ப இனங்காணலின் பின்னர் வட்டியுடைய கடன்களும் கடன்பாடுகளும் விளைவு வட்டி வீத முறையினை பயன்படுத்தி பெறுமதிக் குறைப்பு செலவில் அதனை தொடர்ந்து அளவிடப்படுகின்றன. பெறுகை அல்லது இழப்புகள், பொறுப்புகள் இனங்காணப்படாமையின் போதும் அதே போன்று விளைவு வட்டி வீத முறை பெறுமதிகுறைப்பு செயன்முறையூடாகவும் வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றன.

பெறுமதி குறைப்பு செலவானது கையேற்பு மீதான ஏதேனும் கழிவு அல்லது கட்டுப்பணத்தினையும் மற்றும் விளைவு வட்டி வீத முறையின் முக்கிய பாகமொன்றாக காணப்படுகின்ற கட்டணங்கள் அல்லது செலவுகளை கருத்திற் கொண்டு கணிக்கப்படுகின்றன. விளைவு வட்டி வீத முறை பெறுமதி குறைப்பானது வருமானக் கூற்றில் நிதிச் செலவில் உள்ளடக்கப்படுகின்றது.

இனங்காணாமை

பொறுப்பின் கீழுள்ள கடப்பாடானது நிறைவேற்றப்பட்ட அல்லது இரத்துச் செய்யப்பட்ட அல்லது காலாவதியாகின்ற் போது நிதியியல் பொறுப்பு இனங்காணப்படுவதில்லை. நடப்பில் காணப்படுகின்ற நிதியியல் பொறுப்பொன்று கணிசமாக வேறுபட்ட நியதிகளனின் மீது அதே கடன் வழங்குனரிடமிருந்து வேரொரு வடிவத்தின் மூலம் பதிலீடு செய்யப்படுகின்ற போது அல்லது நடப்பில் காணப்படுகின்ற பொறுப்பொன்றின் நியதிகள் கணிசமான அளவு மாற்றியமைக்கப்படும் போது அத்தகைய பரிமாற்றம் அல்லது மாற்றியமைத்தல்மூலப் பொறுப்பின் இனங்காணமையாகவும் அத்துடன் புதிய பொறுப்பின் இனங்காணப்படுவதாகவும் கருத்தில் கொள்ளப்படும் என்பதுடன். தொடர்புடைய கொண்டு செல்லும் தொகைகளிலுள்ள வேறுபாடு வருமானக் கூற்றில் இனங்காணப்படுகின்றது.

நிதியியல் சாதனங்களை எதிரீடு செய்தல்

நிதியியல் சொத்துகளும் நிதியியல் பொறுப்புகளும் இனங்காணப்பட்ட தொகைகளை எதிரீடு செய்ய நடைமுறையில் அமுலாக்கத்தக்க சட்டரீதியான ஒழுங்கு காணப்படுகின்ற போது மாத்திரம் அத்துடன் தேறிய அடிப்படையில் தீர்ப்பனவு செய்வதற்கு உத்தேசிகின்ற போது அல்லது சொத்துகளின் தேறலும் பொறுப்புகளின் திருப்பனவும் ஒரே நேரத்தில் நிகழ சந்தர்ப்பம் காணப்படும் போது மாத்திரம் நிதியியல் நிலைக் கூற்றில் அறிக்கையிடப்பட்ட தேறிய தொகையுடன் எதிரீடு செய்யப்படுகின்றன. வருமானம் மற்றும் செலவு என்பன சபையின் கணக்கீட்டு கொள்கைகளின் குறித்துரைத்து வெளிப்படுத்தப்பட்டவாறு ஏதேனும் கணக்கீட்டு நியமம் அல்லது பொருள்கோடல் மூலம் தேவைப்படுத்தப்பட்டாலன்றி அல்லது அல்லது அனுமதிக்கப்பட்டாலன்றி வருமானக் கூற்றில் எதிரீடு செய்யப்படாது.

நிதியியல் சாதனங்களின் சீர்மதிப்பு பெறுமதி

